பக்கங்கள்: 12

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 புரட்டாதி03 வியாழக்கிழமை 19.09.2024 கதிர் 316

## இனி இது ரகசியம் அல்ல!

தேர்தல் பரப்புரைகள் நேற்று நள்ளிரவுடன்முடிவுக்குவந்துவிட்டன. இன்றும்நாளையும்அமைதிக்காலம். மக்கள்ஆறஅமரச்சிந்தித்துயாருக்குத் தமது ஆதரவு என்பதைத் ☞ 2

# ரெலோவின் வினோ ரணிலுக்கு ஆதரவு

## கொழும்பில் நேற்று அவரே அறிவிப்பு



எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் வெற்றிக்குத் தான் ஆதரவு வழங்கிறார் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்வினோநோகராதலிங்கம்தெரிவித்தார். அவர் அங்கம் வகிக்கும் ரெலோ கட்சி பொதுக்கட்டமைப்பில் இணைந்துகொண்டு வேட்பாளர் அரியநேத்திரனுக்கு ஆதரவு தெரிவித்திருக்கும் நிலையில் அவரது இந்த அறிவிப்பு வந்துள்ளது.

கொழும்பு பிளவர் வீதியில் அமைந்துள்ள ஜனாதிபதியின் அரசியல் அலுவலகத்தில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்த ☞ 2

## தேர்தல் ஆணைக்குழுவின் விசேட அறிவித்தல்

வாக்கெடுப்புநிலையங்களுக்குள்மற்றும் வாக்கெண்ணும் நிலையங்களுக்குள் தடை விதிக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் தொடர்பில் தேர்தல் ஆணைக்குழுவினால் விசேட அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து தேர்தல்கள் ஆணைக்குழு விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

வாக்கெடுப்புநிலையங்களுக்குள்மற்றும் வாக்கெண்ணும் நிலையங்களுக்குள் கையடக்கத் தொலைபேசிகளை ☞ 9

## தேர்தல் முடிந்த பின்னரும்கூட வன்முறை தொடரும் அபாயம்

### எச்சரிக்கிறார் பேராசிரியர் அர்ஜுன

இம்முறை தேர்தல் முடிவடைந்ததன் பின்னரும்வன்முறைகள்பதிவாகக்கூடிய சாத்தியம் காணப்படுவதாக தேர்தல் வன்முறைகளைக்கண்காணிப்பதற்கான நிலையத்தின் தலைவர் பேராசிரியர் அர்ஜுன பராக்கிரம தெரிவித்துள்ளார்.

கொழும்பிலுள்ள ரேணுகா சிற்றி ஹோட்டலில்நேற்றுசெய்தியாளர்களைச் சந்தித்துப்பேசியதேர்தல்வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம், அதன் அவதானிப்புக்களைவெளியிட்டது. அங்கு உரையாற்றிய பேராசிரியர் மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதித் தேர்தல் திகதி அறிவிக் கப்பட்டதை அடுத்து, தொடக்கத்தில் அது அமைதியான தேர்தல் செயன்முறை போன்றுதென்பட்ட போதிலும் கடந்த இரு வாரகாலத்தில் தேர்தல் முறைகேடுகள், வன்முறைச் சம்பவங்களின் ☞ 2



## தேர்தலில் இன, மத பரப்புரை இல்லாததே ஒரு வெற்றிதான்

### அமைச்சர் அலி, சப்ரி தெரிவிப்பு

வடக்கு, கிழக்கு மற்றும் மலையகம் என அனைத்துப் பகுதிகளிலுமுள்ள தமிழ், முஸ்லிம் மக்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடனேயே இருக்கின்றனர். நாட்டைக் கட்டியெழுப்பிய தலைவருக்கு அனைவரும் சேர்ந்து ஒத்துழைக்க வேண்டும். இந்தத் தேர்தலில் எவரும் இன, மதம் பற்றிப் பேசவில்லை. அதுவே ஒரு வெற்றியாகும் என வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார். ☞ 8

## ரணிலுக்கும் அரியாத்தாருக்குமான தொடர்பு அம்பலப்பட்டுள்ளது

### சுமந்திரன் எம்.பி. நேற்று விளாசல்

ஜனாதிபதிரணில்விக்கிர மசிங்கவுக்கும், தமிழ் தேசிய பொதுக் கட்டமைப் பால் நிறுத்தப்பட்ட ஜனாதி பதி வேட்பாளர் அரியநேத்தி ரனுக்கும் இடையிலான தொடர்புதற்போதுஅம்பலமா கியுள்ளதாக இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் யாழ்.மாவட்டநாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தெரிவித்தார்.

அரியநேத்திரனுக்கு தன்னாலும், சாணக்கியனாலும் அச்சுறுத்தல் இருப்பதாக பிரதிப் பொலிஸ் மா அதிபர் ஒருவர் எழுதி யுள்ள கடிதமானது தேர்தல் சட்டங்களை மீறும் ஒரு செயற்பாடு என்றும் அதன் பின்னணியில் யார் இருக் கின்றார்கள்என்பதைமக்கள் அறிவார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்றுசெய்தியாளர்களிடம் பேசிய அவர் இதனைத் தெரிவித்தார், அவர் ☞ 8

## தேர்தலில் வாக்களிக்கும் முறை

ஜனாதிபதித் தேர்தலில் வாக்காளர்கள் தமது வாக்கை எவ்வாறு சரியாக அளிக்க வேண்டும் என்பது தொடர்பில் தேர்தல் ஆணைக்குழுவால் விளக்கமளிக் கப்பட்டுள்ளது.

அவந்த விவரம் பின்வருமாறு,

வாக்கினை '1' என்றும் விருப்புவாக்குகளை'2'மற்றும் '3' என்றும் குறிக்கலாம்.

ஒரு வாக்கை மட்டும் அளிப்பதற்கு, '1' அல்லது 'X' எனக் குறிக்கலாம்.

எனினும், ஒரு வாக்கை அளிக்கும்போது '1' மற்றும் 'X' என்ற இரண்டையும் குறிக்க வேண்டாம்.

'X' அடையாளம் இட்ட பின்னர் வேறு எந்த எண்ணையும் பயன்படுத்த ☞ 8

## சுமந்திரன், சாணக்கியனால் உயிர் அச்சுறுத்தல் இல்லை

### ஜனாதிபதி வேட்பாளர் அரியநேத்திரன் தெரிவிப்பு

நாடாளுமன்றஉறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன் மற்றும் இராசமாணிக்கம் சாணக்கியன் போன்றவர்களால் தனக்கு உயிர் ஆபத்து ஏற்படாது என தான் நம்புகிறார் என்று ஜனாதிபதி வேட்பாளர் அரியநேந்திரன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்றுச் செய்தியாளர்களிடம்அவர்இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

எனக்கு உயிர் அச்சுறுத்தல் இருப்பதாகக் கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. ☞ 2

## 2 ஆண்டுகளில் எதுவும் செய்யாத ரணிலைத் தோற்கடிக்கவேண்டும்

### வசந்த முதலிகே ஆவேசப் பேச்சு

கடந்த இரண்டுவருடங்களில் இந்த ஆளும் தரப்பு மக்களுக்குச் செய்தது ஒன்றுமில்லை. அதனால் ரணில் விக்ரமசிங்கவை இந்தத் தேர்தலில் தோற்கடிக்கவேண்டும். அத்துடன் ஆளும்தரப்பின் கொள்கையையும் தோற்கடிக்க வேண்டும் என்று மக்கள் போராட்ட கூட்டணி செயற்பாட்டாளர் வசந்த முதலிகே தெரிவித்தார்.

மக்கள் போராட்ட கூட்டணியின் இறுதி தேர்தல் பரப்புரைக் கூட்டம் ☞ 9

## தமிழ் பேசும் மக்களுக்கான தீர்வுகளை அறிவித்துள்ள ஒரே வேட்பாளர் சஜித்தே

### மனோ கணேசன் எம்.பி. தெரிவிப்பு

நாடுமுழுக்கவாழ்கின்றதமிழ் பேசும் மக்களுக்கு, தரக்கூடிய நடைமுறைச் சாத்தியமான தீர்வுகளை, இந்த ஜனாதிபதி தேர்தல்வேளையில்மிகதெளிவாக அறிவித்துள்ள ஒரே வேட்பாளர் ஐக்கிய மக்கள் கூட்டணியின் தலைவர் எமது வேட்பாளர் சஜித் பிரேமதாசா மட்டுமே என்று தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோகணேசன் தெரிவித்தார். எனவே, எங்களை நம்பித் தைரியமாகச் சென்று தொலைபேசி சின்னத்துக்கு வாக்களியுங்கள், என்றும் அவர் தெரிவித்தார்.

கொழும்பில்நேற்றுநடைபெற்ற ஐக்கியமக்கள்கூட்டணின்விசேட செய்தியாளர்கள் சந்திப்பில் உரையாற்றிய அவர் இதனைக் கூறினார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

எம்முடன் போட்டியில் இருப்பவர்கள், இரண்டு வருடம் அதிகாரத்தில்இருந்துவிட்டு, இனப் பிரச்சினைத்தீர்வுக்குக்காத்திரமாக எதுவும்செய்யாமல், தமிழ்பேசும் அரசியல்வாதிகளுக்குமுறையற்ற 'பேர்மிட்' சலுகைகளையும், லஞ்சத்தையும் கொடுத்து ☞ 8

### ரணில் – அநுர கூட்டணி தோற்று

## 20 லட்சம் வாக்குகளால் நான் வெற்றி பெறுவது நிச்சயம்

### புலனாய்வுத் தகவல்களில் உறுதி என்கிறார் சஜித்

செப்டெம்பர் 21 எந்தச் சந்தேகமும் இன்றி 20 இலட்சம் மேலதிக வாக்குகளால் நாம் வெற்றி பெறுவோம். ரணில் விக்கிரமசிங்க அநுரகுமார திசாநாயக்க கூட்டணி தோல்வியைத் தழுவும். இது புலனாய்வுத் துறையின் தகவல்களாகும் என்று எதிர்க்கட்சித் தலைவரும் ஜனாதிபதி வேட்பாளருமான சஜித் பிரேமதாச தெரிவித்தார். ☞ 8

## விசேட தேவையுடையோரும் வாக்களிப்பதற்கு ஏற்பாடு

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் விசேட தேவையுடையவர்கள் வாக்களிப்பதற்கான ஏற்பாடு செய்து கொடுக்கப்படுவதுடன் கண்பார்வையற்ற வாக்காளர் ஒருவர் வாக்குச்சாவடிக்குச்செல்லும்போது அங்கு கடமையில் இருக்கும் சிரேஷ்ட தலைமை தாங்கும் உத்தியோகத்தரின் உதவியுடன் ☞ 8

# ராஜபக்சக்களுடன் சஜித்தே கூட்டு; ரணில் வெல்வார் என்கிறார் ராஜித

ராஜபக்சக்கள் சஜித்துடன் கைகோர்த்துள் ளதுடன் கூட்டணியை உருவாக்கியுள்ளர். இதுதான் உண்மை என்று நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் கொழும்பு பிளவர் வீதியிலுள்ள அரசியல் அலுவலகத்தில் நேற்று செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்த ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் மக்கள் விடுதலை முன்னணிக்கும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கும் இடையில்தான் போட்டிஎன்றுபலர்கருத்துத்தெரிவிக்கின்றனர். மக்கள் விடுதலை முன்னணி குறைந்த வாக்குகளைப் பெற்று தற்போது மூன்றாவது இடத்தில் உள்ளது என்றே கூற வேண்டும்.

கிராமத்தில் ஜே.வி.பி.க்கு அதிக பலம் இல்லை. எனவே, களத்தில் உள்ள யதார்த்தத்தைநாம்புரிந்துகொள்ளவேண்டும். ஐக்கிய மக்கள் சக்தி இரண்டாம் இடத்தில் இருந்தாலும், மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளது. சமூக வலைதளங்களில் இன்று ஒரு வித்தியாசமான செய்தி பரவி வருகிறது. ஜேவிபி ஒரு குமிழி. அந்த காற்று குமிழி ஊதப்படுகிறது. ஆனால் உள்ளே வெறும் காற்றே உள்ளது. எனவே இது ஒரு மாயை. இந்த மாயை செப்டெம்பர் 22 காலைக்குள் நிஜமாகிவிடும்.

நாட்டின்பொருளாதாரத்தைகட்டியெழுப்பிய போதும், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க ராஜபக்ச குடும்பத்தைப் பாதுகாத்து வருகிறார் எனச்சிலர் குற்றம் சுமத்துகின்றனர். அப்போது ரணில் ராஜபக்ச என்று கூறப்பட்டது. ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க ராஜபக்சக்களை பாதுகாத் திருந்தால்இன்றுஅவர்கள்ஜனாதிபதிக்குஎதிராக செயற்படுவார்களா? ராஜபக்சக்கள் சஜித்துடன் கைகோர்த்துள்ளதுடன் கூட்டணியை உருவாக்கியுள்ளர். இதுதான் உண்மை.

ஜனாதிபதி தேர்தலில் சஜித்தை வெற்றியடையச் செய்து, எதிர்க்கட்சித் தலைவராக நாமலை நியமிப்பதே சஜித்துக்கும் நாமலுக்கும்இடையிலானஇந்தக்கூட்டணியின் நோக்கமாகும். அதற்கு, ராஜபக்சக்கள் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாது என சஜித் உறுதியளித்துள்ளார். சஜித் மற்றவர்களை ஏமாற்றிக்கொண்டு, அவர்கள்ஏமாற்றுகிறார்கள் என்று கூறுகிறார். அண்மையில் மஹிந்த ராஜபக்சவும் நாமல் ராஜபக்சவும் சஜித்துடன் கலந்துரையாடியுள்ளனர்.

சஜித் தான் ஜனாதிபதியாக வருவதற்கு உதவிகேட்டும், அதற்காகநாமலைஎதிர்க்கட்சித் தலைவராக்குவதற்கு ஆதரவளிப்பதாகவும் உறுதியளித்துள்ளார். இது நேர்மையற்ற கூட்டணி. அடுத்தஐந்தாண்டுகளில்எதிர்க்கட்சித் தலைவராக நாமல் ராஜபகச்வை நியமித்து அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளராக முன்நிறுத்துவதே அவர்களின் எதிர்பார்ப்பு.

இன்றுஜனாதிபதிரணில்விக்ரமசிங்கவுக்கு எதிராக ராஜபக்சக்கள் செயற்படுகின்றனர். ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவைத் தோற்கடித்து சஜித்தை ஜனாதிபதியாக்கி அவர்களின் அரசியல் சதிகளை வெற்றிபெறச் செய்வது அவர்களின் தேவையாகும் - என்றார்.

# வாக்காளர் அட்டைகளை தபாலகங்களில் பெறலாம்

இதுவரை உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகள் கிடைக்கப்பெறாதவர்கள், நேற்று முதல் தேர்தல் நடைபெறும் தினம் வரை தமது பிரதேசத்திலுள்ள தபால் நிலையத்துக்குச் சென்று வாக்காளர் அட்டைகளைப் பெற்றுக் கொள்ள முடியுமென பிரதி தபால்மா அதிபர் ராஜித ரணசிங்க தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளில் சுமார் 97 சதவீதம் விநியோகிக்கப்பட்டுள்ளதாக தபால் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கடந்த 3ஆம் திகதி ஆரம்பமான உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டை விநியோகம் 14ஆம் திகதி நிறைவடைந்ததாக பிரதி தபால்மா அதிபர் ராஜித ரணசிங்க குறிப்பிட்டார்.

## இனி இது .....

தீர்மானிக்கவேண்டும். இந்தத் தேர்தல் தெற்கிற்கு எந்தளவு முக்கியமோ அந்தளவிற்கு தமிழ் மக்களுக்கும் மிக முக்கியம். தமிழ்த் தேசியம் பேசிக்கொண்டிருக்கும் கட்சிகளின் முகமூடிகளைக்கிழிப்பதற்கானவாய்ப்புக்களை இந்தத் தேர்தல் வழங்கியிருக்கின்றது.

ஆட்சி அதிகாரத்தில் இருப்பவர்களோடு எப்போதுமே மிகச் சிறப்பான கள்ள உறவை வைத்திருக்கும் தமிழ்த் தேசியம் பேசும் அரசியலாளர்கள் பலரை இந்தத் தேர்தல் மக்களுக்குவெளிச்சம்போட்டுக்காட்டியுள்ளது. அவர்கள் ஒற்றுமை, தமிழ்த் தேசக் கட்டுமானம் என்கிற கோரிக்கைகளுக்குள் புகுந்துகொண்டு தம்மை மறைக்க முற்பட்டாலும் ''கொண்டையை மறந்த தருணங்களாக" அம்பலப்பட்டுப்போனார்கள். மொத்தத்தில் வென்றிருப்பது என்னவோ சிங்கள வேட்பாளர்கள்தான்.

..................

தமிழ் அரசுக் கட்சியை சுக்குநூறாக சிதைத்திருக்கும் ரணில் விக்கிரமசிங்க கடைசியில் ரெலோவையும் விட்டு வைக்கவில்லை. தமிழ் அரசுக் கட்சி கூட்டமைப்பின் தலைமைக் கட்சியாக இருந்தது. ரெலோ அதற்குத் தலைமை தாங்க விருப்பப்பட்டது. ரணில் இரண்டையும் பிய்த்துப் புடுங்கி எறிந்துவிட்டார்.

நேற்று ரெலோவின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான வினோ நோகராதலிங்கம் ரணிலுக்குத் தனது ஆதரவு என்பதை அறிவித்தார். கடைசிப் பந்தில் ரணில் அடித்த சிக்ஸ் அது. ரெலோவும் அங்கம் வகிக்கும் தமிழ்த் தேசியப் பொதுக்கட்டமைப்பின்ஜனாதிபதிவேட்பாளரான அரியநேத்திரனை ஆதரிக்கமாட்டேன் என்று வினோ ஏற்கனவே அறிவித்திருந்தார். வன்னி மக்கள் அரியநேத்திரனை ஆதரிக்கவில்லை என்பதால் தானும் ஆதரிக்கப்போவதில்லை என்று தெரிவித்திருந்தார். ஆனால் பரப்புரையின் கடைசி நாளான நேற்று கொழும்பில் ரணிலின் அலுவலகத்தில் போயிருந்துகொண்டுதான் ரணிலுக்குத்தான் ஆதரவு என்று அறிவித்துவிட்டார்.

இப்போது ரெலோ தலைவர் செல்வம் மற்றும் ஜனா ஆகியோரின் கதி சிக்கல்தான். கட்சிக்குள்ளேயே கூர்வாள் ஒன்றை ஓங்கிச் சொருகியிருக்கிறார் ரணில். இனி என்ன முகத்துடன்போய்ரணிலைப்பார்ப்பதுஎன்பது இவர்களுக்குள்ள பிரச்சினை. ஏற்கனவே ரெலோ ஒப்புக்குச் சப்பாணியாகத்தான் அரியநேத்திரனுக்கு ஆதரவாகப் பரப்புரை செய்கிறது. தமிழ் ஜனாதிபதி வேட்பாளர் என்று முதலில் அளவுக்கதிகமாகத் துள்ளிய ரெலோவின் பேச்சாளர் சுரேன் குருசாமியின் சத்தத்தையே காணவில்லை. ஏற்கனவே நீதிமன்றத்தில் காணி மோசடி வழக்கு நிலுவையில்இருக்கும்நலையில்ரணிலையும் பகைத்துக்கொண்டு எதற்கு வம்பு என்று நினைத்தாரோ என்னவோ அவரது மூச்சுப் பேச்சைக் காணவில்லை. அண்மைய நாட்களில் அரியத்தாருக்கு ஆதரவாக நடந்த கூட்டங்கள் எவற்றிலும் செல்வம் அடைக்கலநாதனையும் காணவில்லை. ஆடிக்கொருக்காள் அமாவாசைக்கொருக்கால் என்றுஅடிக்கடிசெய்தியாளர்கள்சந்திப்புக்களை நடத்தும் இவர்கள் இருவரும் இப்போது 'கப்சிப்'

அதற்கொரு காரணமும் இருக்கின்றது. வினோவும் சாள்ஸ் நிர்மலநாதனும் ரணில் பக்கம் சாய்திருக்கும் நிலையில் ரெலோவின் கோட்டை எனக் கருதப்படும் வவுனியா முல்லைத்தீவில் வினோ ஒரு பக்கத்தால் வாக்குகளை உடைக்க, மன்னாரில் சாள்ஸ் நிர்மலநாதன் ஒரு பக்கத்தால் வாக்குகளை உடைக்க அடுத்த தேர்தலில் தமிழ் அரசுக் கட்சிவேறு வாக்குகளைத் தனியே உடைக்க ரெலோவின் அரசியல் எதிர்காலம் கேள்விக்குறிதான். ரணிலுக்கும் அரியத்தாருக்கும் இடையில் ஒரு அரசியல் ஓட்டம் ஓடலாம் என்று நினைத்த செல்வம் அன்ட் கோவுக்கு ரணில் வைத்திருக்கிறார் ஒரு ஆப்பு.

..........................

தமிழ் அரசுக் கட்சியில் தாங்கள் அரியநேத்திரனுக்கு ஆதரவு என்று நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரனும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவனும்அறிவித்தாலும், தங்களுக்குக் கீழுள்ள கட்சிக் கிளைகளை அப்படி முடிவெடுக்கப்பண்ணினாலும் பொதுக் கட்டமைப்பினரின் அரசியல் மேடையில் கடைசிவரை ஏறாமல் தவிர்த்து விட்டார்கள். பதிலாக பொதுக் கட்டமைப்புக்காரர்களையும் ஏமாற்றும் வகையில் (பாம்புக்குத் தலையும் மீனுக்கு வாலும்) வட்டுக்கோட்டையில் ஒரு கூட்டம்போட்டுபொதுக்கட்டமைப்புக்காரர்கள் எவரும் இன்றி அரியநேத்திரனுக்கு ஆதரவு என்று பேசியிருக்கின்றார்கள். அது ஏன் என்று அவர்கள்தான் கூறவேண்டும். இந்தச் சூட்சுமங்கள் எதுவும் விளங்காமல் கிளிநொச்சியில் சிறீதரன் ஏற்பாடு செய்த அரியநேத்திரனுக்கு ஆதரவான கூட்டத்தில் மேடை ஏறி தன்னை அசிங்கப்படுத்திக்கொண்டார் மாவையர். இனி என்ன நடக்கும்?

கட்சியின் முடிவை மீறிய இவர்களுக்கு எதிராக கட்சி ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்து இவர்களை வெளியேற்றுமா என்ற கேள்விதான் இப்போது எஞ்சியிருக்கின்றது. கட்சி இவர்களை வெளியேற்றாது, இவர்களாக வெளியேறவேண்டியதேவையைஏற்படுத்தும் என்றுதெரிகின்றது. யாழ்ப்பாணத்தில்நேற்றுச் செய்தியாளர்களைச் சந்தித்த கட்சியின் மூத்த உபதலைவர் சிவஞானத்தின் கருத்துக்களை உன்னிப்பாகக் கவனித்தால் இது புரியும். நாடாளுமன்றத் தேர்தலில் புதியவர்களுக்கு இடமளிக்கப்படவேண்டும் என்ற சாரப்பட அவர் கருத்துத் தெரிவித்துள்ளார். அதாவது கட்சியின்கட்டுப்பாட்டைமீறியவர்களுக்குஇனி தேர்தலில் போட்டியிட கட்சி அனுமதிக்காது என்பதைத்தான்அவர்மறைமுகமாகச்சொல்ல வருகின்றார் போலுள்ளது. ஆகமொத்தத்தில் விரைவில் வர இருக்கும் நாடாளுமன்றத் தேர்தலில் சிறீதரன், மாவை, சரவணபவன் ஆகியோருக்கு வேட்பாளர் சீட்டுக் கிடைக்காது என்பது தெளிவாகின்றது. பிறகு தமிழ் அரசுக் கட்சியில் அவர்கள் இருந்தென்ன பயன். பதவி இல்லாமல் கட்சிக்குச் சேவை செய்ய அவர்கள் என்ன இழிச்சவாயர்களா? எனவே கட்சியைவிட்டு அவர்களாகவே வெளியேறிவிடுவார்கள்.

.................

யாழ்ப்பாணப்பல்கலைக்கழகஆசிரியர்கள் 15 பேர் இணைந்து, ஜனாதிபதித் தேர்தலில் மக்கள் யாரை ஆதரிக்கவேண்டும் என்று தெளிவுபடுத்தும் வகையில் ஓர் அறிக்கை வெளியிட்டிருந்தார்கள். இப்படியொரு அறிக்கையை அரியத்தாருக்கு ஆதரவாக விடுக்கமுடியாத நிலையில்தான் ''பல்கலைக்கழகச் சமூகம்'' என்ற பெயரில் அநாமதேய அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தார்கள். அந்தத் தரப்புக்கு ஆசிரியர்களின் இந்த அறிக்கை கடும் கோபத்தைக் கிளறிவிட்டிருக்கின்றது. அதனால் இந்த 15 ஆசிரியர்களுக்கும் எதிராக வழக்கம்போல துரோகிப்பட்டம் கட்டும் நடவடிக்கையில் இறங்கியுள்ளனர்.

இத்தனைக்கும் அந்த ஆசிரியர்கள் 15 பேரும் தமது அறிக்கையில் அரியநேத்திரனுக்கு வாக்களிக்கவேண்டாம் என்றோ ரணில் அல்லது சஜித் அல்லது அநுரவுக்கு வாக்களியுங்கள் என்றோ சொல்லவேயில்லை. தமிழ்த் தேசியத்தை மட்டும்முதன்மைப்படுத்தி வாக்களிக்காதீர்கள் என்றுதான் கேட்டிருந்தது. அதைக்கூடப் பொறுத்துக்கொள்ள முடியாத குழுவினர் இந்த 15 ஆசிரியர்களுக்கும் எதிராக அநாமதேய அசிங்கசுவரொட்டிகளைஒட்டியிருக்கிறார்கள். மாணவர்களைத் தூண்டிவிட்டு இந்தச் செயல் செய்யப்பட்டிருப்பதாகவே கருதப்படுகின்றது. அறிக்கையில்கையெழுத்திட்ட ஆசிரியர்களின் படங்களையும் போட்டு அவர்கள் தேசத்- துரோகிகள் என்கிற அளவிற்கு அந்தச் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

கருத்துக்களைக் கருத்துக்களால் எதிர்கொள்ள முடியாத கோழைத்தனமான இந்தச் செயலைச் செய்தவர்கள் மற்றவர் களை அல்ல தங்களையே இழிவுபடுத்திக் கொள்கிறார்கள். அவர்களின் துரோகி தியாகி காலமெல்லாம் மலையேறிவிட்டது என்பது அவர்களுக்கு இன்னும் புரியவில்லைப் போலுள்ளது. விரைவில் அவர்கள் பல்கலைக்கழகத்திற்குள்ளேயே அதனைப் புரிந்துகொள்ளும்வாய்ப்புக்கிட்டும். அதற்கான பயணம் ஏற்கனவே தொடங்கிவிட்டது.

**இடிமின்னல்**

(idiminnal@gmail.com)

## ரெலோவின் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் இதனைத் தெரிவித்தார்.

வன்னி மக்கள் மனப்பாங்கை அறிந்த நிலையிலேயே இந்த முடிவை எடுத்தேன் என்று அவர் தெரிவித்தார், வன்னி மக்களின் பெரும்பான்மையானவர்கள் ரணில் விக்ரமசிங்கவை ஆதரிக்க தயாராக உள்ளனர் எனவும் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

முழுநாட்டு மக்களினதும் விருப்பத்திற்கு அமைவாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க வெற்றி பெற இருக்கிறார். வடக்கு, கிழக்கு தமிழ் மக்களின் விருப்பத்தையும் இங்கு வெளியிடவேண்டும். மூன்று பிரதான வேட்பாளர்களில்அதிகூடியதகைமைகளையும் ஆளுமையையும் அனுபவத்தையும் கொண்டவர்ரணில்விக்ரமசிங்கஒருவர்தான். அவரின் வெற்றி உறுதிப்படுத்தப்பட்டுவிட்டது.

நாட்டுக்கு அரசியல் பொருளாதார உறுதிப் பாடு அவசியம். ரணில் விக்ரமசிங்கதான் நாட்டுக்கு விடிவைப் பெற்றுக்கொடுத்தார். இந்த உறுதிப்பாடு தொடரவேண்டும் என சர்வதேசநாணயநிதியம்கூட அறிவித்துள்ளது. இப்போதுள்ளசமூகநிலைதொடரவேண்டுமாக இருந்தால் தற்போதுள்ள ஜனாதிபதி தொடர்ந்து ஆட்சி செய்யச் சந்தர்ப்பம் அளிக்கப் படவேண்டும்.

மரதனோட்டப் பந்தயத்தில் பாதியைக் கடந்து வந்துள்ள நிலையில் ஓட்டத்தை மாற்றினால் புதிதாக வரும் தலைவருக்கு தொடக்கத்தில் இருந்து ஓட நேரிடும். எனவே, எஞ்சிய தூரத்தை ஜனாதிபதியினால்தான் இலகுவாக ஓடி முடிக்க முடியும்.

சஜித் பிரேமதாஸவிற்கு ஆதரவு வழங்கும் முடிவுதமிழரசுக்கட்சியின்நிலைப்பாடல்ல. அது சுமந்திரனின்தனிப்பட்ட நிலைப்பாடுமாத்திரமே. கட்சியிலுள்ள பெரும்பான்மையானவர்கள் ரணில் விக்ரமசிங்கவை ஆதரிக்கும் முடிவி லேயே உள்ளனர் எனவும் அவர் தெரிவித்தார்.

ஜனாதிபதி அண்மையில் மன்னாருக்கு வருகை தந்த போது சார்ள்ஸ் நிர்மலநாதனை சந்தித்தார். இதன் போது மன்னார் மக்களின் ஆதரவும் ஜனாதிபதிக்கு அளிக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டது. யதார்த்த அரசியலை விளங்கிய அனைவரும் ரணில் விக்ரமசிங் கவின் வெற்றியில் கைகோர்க்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்தார்.

## தேர்தல் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எண்ணிக்கை அதிகரித்து நிலைமை மோசமடைந்திருக்கிறது. இதுவொரு ஆரோக்கியமான போக்கு அல்ல.

குறிப்பாக தேர்தல் அறிவிக்கப்பட்டதன் பின்னரான காலப்பகுதி முதல் செப்டெம்பர் 17 வரையான காலப்பகுதி யில் எமக்கு தேர்தலுடன் தொடர்புடைய பாரதூரமான வன்முறைச்சம்பவங்கள் தொடர்பில் 125 முறைப்பாடுகளும், சட்டமீறல்கள் தொடர்பில் 729 முறைப்பாடுகளும், மொத்தமாக 854 முறைப்பாடுகளும் கிடைக்கப்பெற்றிருக்கின்றன. இருப்பினும் இவை தொடர்பில் தேர்தல்கள் ஆணைக் குழுவுக்குக் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள் முறையே 30, 4459 மற்றும் 4581 ஆகக் காணப்படுகின்றன.

அதேபோன்று தேர்தல் முறைகேடுகள், வன்முறைச்சம்பவங்கள் உள்ளிட்டவற்றை அடிப்படையாகக்கொண்டு நோக்குகையில் கொழும்பு, களுத்துறை, காலி, அநுராதபுரம், பதுளை, மொனராகலை ஆகிய மாவட்டங்களில் ஏனைய மாவட்டங்களுடன் ஒப்பிடுகையில் அதிக எண்ணிக்கையான முறைகேடுகள் மற்றும்வன்முறைகள்பதிவாகியிருக்கின்றன. வடமாகாணத்தில் இவ்வாறான சம்பவங்கள் குறைவாகப் பதிவாகியிருப்பினும், அம்மாகாண மக்கள் தாமும் இத்தேர்தலில் உள்வாங்கப்பட்டிருப்பதாகக் கருதவில்லை என்பதே அதற்குக் காரணம் என்பது எமது அவதானிப்பாக இருக்கின்றது.

அதுமாத்திரமன்றி அங்கு சில தரப்பினர் ஜனாதிபதித் தேர்தலைப் புறக்கணிக்குமாறும் பரப்புரை செய்கின்றனர். இவ்வாறு தேர்தலில் மக்களைப் பங்கேற்கவேண்டாம் எனக்கூறுவது, ஒட்டுமொத்ததேர்தலிலும்பெரும தாக்கத்தை ஏற்படுத்தும். அடுத்ததாக தேர்தல் முறைகேடுகளில் பிரதானமாக அரச அதிகாரம்

தொடர்ச்சி 8ம் பக்கம்....

காலைக்கதிர் Kalaikkathir

# அன்று சொன்னதையே இன்றும் வலியுறுத்துகின்றேன் நாட்டுக்கு ரணில் விக்ரமசிங்கவின் வெற்றி அவசியம்

## அம்பாறையில் அமைச்சர் டக்ளஸ் வலியுறுத்து





நாட்டில் வன்முறை சூழல் உருவாகிய நேரத்தில் ரணில் விக்ரமசிங்கதான் இந்த நாட்டை பொறுப்போற்று வழிநடத்த சரியானவர் என்பதை நான் எவ்வாறு அன்று திடமாக எடுத்துக் கூறியிருந்தேனோ அதேபோன்றுதான் அடுத்த அரசியல் பருவகாலத்திலும் இந்த நாட்டை சிறந்த முறையில் வழிநடத்தி மக்களுக்கும் நாட்டுக்கும் சிறப்பான எதிர்காலத்தை கொடுக்க அவரது தேர்தல் வெற்றி அவசியம் என்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வலியுறுத்தியுள்ளார்.

அம்பாறை காரைதீவில் ரணில் விக்ரமசிங்கவின் தேர்தல் வெற்றியை வலுப்படுத்துவதற்காக ஒழுங்குபடுத்தப்பட்டிருந்த கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு வலியுறுத்தியுள்ளார்.

இதன்போது அவர் மேலும் கூறுகையில் –

சில சக்திகளின் சுயநலத் தேவைகளுக்காக நாட்டில் வன்முறை தலைதூக்கிய நேரத்தில் நாட்டை தற்றுணிவுடன் பொறுப்பேற்று அந்த சூழ்நிலையிலிருந்து விடுவித்து பொருளாதார ரீதியில் நாட்டை முன்னேற வழிகாட்டியவர் ரணில் விக்ரமசிங்க தான்.



குறிப்பாக ஏனைய தலைவர்கள் முடியாது என்று கூறுகையில் தற்துணிவுடன் ஆட்சியை ஏற்றார். இந்நாட்டு மக்கள் உணவு, மருந்து, எரிபொருள், எரிவாயு இன்றி தவிக்கும் போது சஜித்தோ, அநுரவோ கண்டுகொள்ளவில்லை.

மருந்து இல்லாமல் மக்கள் இறந்தபோது அவர்கள் வருத்தப்படவில்லை. அவர்கள் தங்கள் அரசியல் இலக்குகளை அடைய முயற்சித்தார்கள். அதுமட்டுமல்லாது ஓடி ஒளித்தார்கள்.

அவ்வாறு கஷ்டப்பட்டு அடைந்த வெற்றியைப் பாதுகாக்கும் வகையில் எதிர்வரும் செப்ரெம்பர் 21 ஆம் திகதி எரிவாயு சிலிண்டருக்கு வாக்களித்து அவரை வெற்றிபெறச் செய்வதே நாட்டு மக்களாகிய உங்களது பிரதி உபகாரமாக இருக்கும்.

இதேவேளை, மக்களுக்கு பொய்யானவாக்குறுதிகளைவழங்கும் சஜித்திடமோ அல்லது அநுரவிடமோ நாட்டை முன்னேற்றுவதற்கான வேலைத் திட்டம் எதுவும் இல்லை எனவும் சுட்டிக்காட்டிய அமைச்சர் இத்தகையவர்களது போலி பிரசாரங்களை மக்கள் செவிசாய்க்கப் போவதில்லை.

மேலும்ஈ.பிடிபியின்வழிமுறையின் பாதையில்அணிதிரண்டுஎம்மைநம்பி ரணிலை வெற்றிபெறச்செய்ய அவரது சின்னமான எரிவாயு சிலிண்டர் சின்னத்துக்கு வாக்களிக்குமாறு உங்களிடம் கோருகின்றேன்.

அதுமட்டுமல்லாது எம்மை நம்பி உங்கள் வாக்குகளை அளியுங்கள். கட்சி என்ற ரீதியில் அதற்கு நாம் பொறுப்பாக இருப்போம். நாம் சொல்வதைத்தான் செய்வோம். ஜனாதிபதி ரணிலின் மீது நம்பிக்கை வைத்து செயற்பட வேண்டும்.என்று அவர் வலியுறுத்தியதுடன் அவரது வெற்றியே காலத்தின் தேவையாக உள்ளது.

இதேநேரம் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மக்களுக்கு கொடுக்கும் வாக்குறுதிகளுக்கும் நான் உங்கள் முன்னால் கூறியவற்றுக்கும் நாமே பொறுப்பாகவும் இருப்போம் எனவும் சுட்டிக்காட்டிய அமைச்சர் அரசியலுக்காகவோ அல்லது வாக்குக்காகவோ எதையும் நான் பேசுவதில்லை.

உங்களதும் நாட்டினதும் எதிர்காலத்தை ஒளிமயமாக்கும் வேலைத் திட்டங்களை அவர் செய்து காட்டியுள்ளார். இதேநேரம் மக்கள் நலன் சார்ந்தே எனது அனைத்து செற்பாடுகள் அமையும்.

அதனடிப்படையில் எதிர்வரும் 21 ஆம் திகதியன்று உங்கள் ஒவ்வொரு வாக்கினூடாக எரிவாயு சிலிண்டர் சின்னத்தை வலுப்படுத்தி அந்த சந்தர்ப்பத்தைரணில்விக்ரமசிங்கவுக்கு கொடுப்பதன் ஊடாகவும் அவரோடு நாம் ஒவ்வொருவரும் சேர்ந்து பயணிப்பதன் ஊடாகவும் எமது மக்கள் எதிர்கொள்ளுகின்ற பிரச்சினைகளில் இருந்து விடுதலைபெற முடியும் .

இந்தநிகழ்வின்போது அமைச்சரது சேவைகளை பாராட்டி பொன்னாடை போர்த்தி மலர்மாலை அணிவித்து குறித்த நிறுவனத்தினரால் அமைச்சர் கௌரவிக்கப்பட்டிருந்ததுடன் நினைவு சின்னங்களும் அமைச்சருக்கு வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (05)

## அமைதியும் அஹிம்சையும் உரிமைக்கு வழிவகுக்காது

### குரலற்றவர்களின் குரல் அமைப்பு தெரிவிப்பு




'நமக்காக நாமே' என்று வேற்றுமையில் ஒற்றுமை கண்டு இனமாக ஓரணி நின்று, தனிவிரல் எழுச்சிக்கு தமிழர்கள் அடம்பன் கொடியாய் திரண்டிட வேண்டும் என குரலற்றவர்களின் குரல் அமைப்பினர் தெரிவித்துள்ளனர்.

யாழ். ஊடக அமையத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவ்வாறு தெரிவித்தனர். அவர் மேலும் தெரிவித்ததாவது:

பல தசாப்தங்களாக தமது இருப்புக்கும் உரிமைக்கும்போராடிக்கொண்டிருக்கும்முதுபெரும் இனமான தமிழினம், இத்தனை ஆண்டு காலமாக இலங்கை தேசத்தின் அரியாசன அதிகாரத்திற்கு அயலவரைதெரிவுசெய்துஎதனையுமேஅடைந்திடாத ஏமாற்றத்தால் அலுத்துப் போய் இருக்கிறது.

இவ்வேளை, பல்லின கலாசார பண்பாட்டினை கொண்ட மக்கள் வாழ்கின்ற இலங்கைத் தீவில், யார் யாரை ஆழ்வது என்கின்ற அரசியல் அதிகார போட்டிக்கு நாடு தயாராகிக் கொண்டிருக்கிறது. இத்தருணத்தில், 'குரலற்றவர்களின் குரல்' அமைப்பினராகிய நாம், காலத் தேவை உணர்ந்து சமூக அக்கறையுடன் இந்த அறிக்கையை பொதுக் களப்படுத்த கடமைப்படுகிறோம்.

ஒரு பூர்வீக வரலாற்றை கொண்ட மக்கள் இனம் என்ற வகையில், 'ஒற்றுமையாக வாழ்வோம் என்கின்றஅதிகாரவர்க்கத்தின்ஒற்றைவாக்குறுதியை நம்பி சுதந்திர வாழ்வுரிமைக்காக பல்வேறுபட்ட விட்டுக்கொடுப்புகளுடன் படியிறங்கி அமைதிப் பேச்சுக்களில் ஈடுபட்டது தமிழினம்.

ஆனாலும், கிடைத்தவை வெற்று வாக்குறுதிகள் மட்டுமே. இலங்கை ஒரு ஜனநாயகப்பெயர் கொண்ட நாடென்ற வகையில், அடுத்து வந்த தமிழ்ச் சந்ததிகள் அஹிம்சைப் போராட்டங்களின் ஊடாக அதிகாரத்தின் கதவுகளை தட்டின. அவைகளும் கூட இரும்பு கரம் கொண்டு அடக்கப்பட்டன.

இதன் மூலம், 'அமைதியும் அஹிம்சையும், உரிமைக்கு வழிவகுக்கப் போவதில்லை' என்றுணர்ந்த இளைய தலைமுறையின் கைகளில் ஆயுதங்களை வலிந்து திணித்தது இலங்கையின் பேரினவாதம். அதன் விளைவுகளும் கூட, பன்னாட்டு பலத்தின் ஊடே நிர்மூலமாக்கப்பட்டதுதான் தமிழினத்தின் இதுநாள் வரலாறு.

இப்போது, சற்று நின்று நிதானித்து சிந்தித்து செயலாறும் முக்கிய தருணம் என்பதை கவனப்படுத்தியாக வேண்டும்.

அதாவது, வடக்கு கிழக்குத் தமிழர் தாயகத்தின் சுமார் 18,888 சதுர கிலோமீற்றர் நிலப்பரப்பில் வாழ்கின்ற 35 லட்சம் மக்களின் தன்னாட்சி அதிகாரத்தின் அவசியத்தை மக்கள் பலத்துடன் உலகறிய செய்ய வேண்டும். அதற்கு, உலக வாழ் தமிழினம் அடம்பன் கொடியாய் திரளும் தருணமொன்றைகாலம்இப்போதுஎமக்களித்துள்ளது.

இதற்கு மேலும் அடிமைப்படுத்தும் அதிகாரத்தின் வரம்புக்குள், இரண்டாம் தர குடிமக்களாக தருவதை ஏற்றுக்கொண்டு தங்கி வாழும் இனமாகத் தமிழர்கள் இருந்துவிட முடியாது என்பதை, மாபெரும் சேனையாக திரண்டெழுந்து சர்வதேசத்தின் செவிகளுக்கு இடித்துரைக்க வேண்டும்.

தமிழினம் இதுநாள் வரை சந்தித்து வந்த பேரிழப்புகளுக்கெல்லாம் பரிகார நீதி வேண்டுமென்றால், 'நமக்காக நாமே' என்று வேற்றுமையில் ஒற்றுமை கண்டு இனமாக ஓரணி நின்று, தனிவிரல் எழுச்சிக்கு தமிழர்கள் அடம்பன் கொடியாய் திரண்டிட வேண்டும் என்பதை அவசியப்படுத்துகின்றோம் என தெரிவித்தனர்.

(05)

## மீன்களை ஏற்றிச்சென்ற லொறி கோர விபத்து

### ஒருவர் படுகாயம்



கதிர்காமம் - செல்லகதிர்காமம் பிரதான வீதியில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார் என கதிர்காமம் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து செவ்வாய்க்கிழமை இடம்பெற்றுள்ளது. அம்பாந்தோட்டையிலிருந்துமஹியங்கனை நோக்கி மீன்களை ஏற்றிச் சென்ற சிறிய லொறி ஒன்று சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி அருகிலிருந்த மரத்தில் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

லொறியின் சாரதி உறங்கியதால் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தின் போது, லொறியின் உதவியாளர் ஒருவர் படுகாயமடைந்துள்ள நிலையில் கதிர்காமம் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் மேலதிக சிகிச்சைக்காக அம்பாந்தோட்டை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கதிர்காமம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

## பாதாள உலக கும்பலை சேர்ந்த ஒருவர் கைது

பாதாள உலக செயற்பாடுகளை கட்டுப்படுத்துவதற்காக உருவாக்கப்பட்ட 20 விசேட குழுக்களால் நாடளாவிய ரீதியில் கடந்த 24 மணித்தியாலத்திற்குள் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் பாதாள உலக கும்பலைச் சேர்ந்த மேலும் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

ரத்கம பிரதேசத்தைச் சேர்ந்த 34 வயதுடைய நபரொருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

இதன்போது, பாதாள உலக கும்பலுடன் தொடர்புகளை பேணியதாக கூறப்படும் மேலும் 15 பேர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த மார்ச் மாதம் 19ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட இந்த சுற்றிவளைப்பில் இதுவரை பாதாள உலக கும்பலைச் சேர்ந்த 4,044 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர். (05)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## வாக்காளர்கள் உணர்ந்து செயற்படவேண்டும்

நள்ளிரவுடன் தேர்தல் பரப்புரைகள் முடிவுக்கு வந்துவிட்டன. இன்றும் நாளையும் அமைதிக்கான காலம். ஆனால் சமூக ஊடங்கள் இந்த இரு நாள்களும்தான் தீவிரமாக இயங்கும் என்பதை எதிர்பார்க்கலாம். சேறடிப்புக்கள், பொய்கள், வதந்திகள், கீழ்த்தரமான விமர்சனங்கள் என்பவற்றை இந்த இரு நாள்களிலும் அதிகம் பார்க்கவும் கேட்கவும் வேண்டியிருக்கும். கருத்துக்களைக் கருத்துக்களால் எதிர்கொள்ள முடியாதவர்கள் இதுபோன்ற கீழ்த்தரமான செயல்களைபோலிக்கணக்குகளுக்குள்மறைந்திருந்துகொண்டு செய்வார்கள் என்பது கடந்த காலங்களிலேயே அறியப்பட்ட ஒன்று. அதற்கான அறிகுறிகளை கடந்த சில தினங்களாகவே சமூக ஊடகங்களில் காணமுடிகிறது. அதிலிருந்து விலகி இருப்பதே வாக்காளர்களுக்கு தெளிவான சிந்தனைக்கான வழியைத் தரும்.

சமூக ஊடகங்களில் தவறான, போலியான பரப்புரைகள் முன்னெடுக்கப்படுவதைக் கண்காணிப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. ஏற்கனவே நிகழ்நிலைக் காப்புச் சட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கும் நிலையில் அத்துமீறுபவர்களுக்கு எதிராகச் சட்டம் பாயும் நிலை இருந்தாலும், நேரடியாக அன்றி மறைமுகமாக சேறடிப்பு மற்றும் கீழ்த்தரமான விமர்சனங்களை முன்வைப்பது அதிகளவில் இடம்பெறும். இதனால் இளம் வாக்காளர்கள் அதிகம் இடைஞ்சல் செய்யப்படுவது தவிர்க்க முடியாததாக இருக்கும். தெளிந்த சிந்தனையோடு வாக்களிப்பதற்கு முகப்புத்தகம், எக்ஸ் தளம், வடஸ்அப், வைபர் போன்றவற்றிலிருந்து அவர்களும் விலகியிருப்பதே சிறந்தது.

இந்தஇரண்டுநாள்அமைதிஎன்பதுஅரசியல்கட்சிகளுக்கானது அல்ல. அது முற்றிலும் வாக்காளர்களுக்கானது. கடந்த சுமார் ஒரு மாத காலத்தில் அவர்களின் மூளைகளுக்குள் திணிக்கப்பட்ட கருத்துக்களில் இருந்து சுயமாகச் சிந்தித்து முடிவெடுப்பதற்கான காலம் இது. வாக்காளர்கள் அதனைச் சரியாகப் பயன்படுத்திக்கொள்ளவேண்டும். அடுத்தவர்களின் கருத்துக்கள், திணிப்புக்களை விடுத்து அவரவர் தமக்கும் தம்மைச் சுற்றியிருப்பவர்களுக்கும் எது சிறந்ததோ அதைத் தெரிவு செய்வதற்கு உளச்சுத்தியோடு முன்வரவேண்டும். அதற்கு நேர்மையாக இந்த நாட்களில் சிந்திப்பது அவசியம்.

2024 அரச தலைவர் தேர்தலில் முதன்மை வேட்பாளர்களாக சஜித், அநுர, ரணில், நாமல் ஆகியோர் உள்ளனர் என்று கணிக்கப்படுகின்றது. 38 வேட்பாளர்கள் போட்டியிடுவதாக அறிவிக்கப்பட்டபோதும் அவர்களில் 17 வரையானோர் எங்கு இருக்கின்றார்கள் என்பதே தெரியவில்லை. அவர்கள் ஒரேயொரு பரப்புரைக் கூ–ட்டத்தைக்கூட நடத்தவில்லை என்று தேர்தல் கண்காணிப்புக் குழுக்கள் சுட்டிக்காட்டுகின்றன. எஞ்சியோரில் சிலர் ஒப்புக்கு ஒரு சில கூட்டங்களை நடத்தினர். சில வேட்பாளர்கள் தமது ஆதரவை மற்றொரு வேட்பாளருக்கு வழங்கும் வகையில் அவர்களின் பரப்புரை மேடைகளிலேயே ஏறியிருக்கின்றனர். இப்படிப்பட்ட நிலையில் முன்னணியில் இருப்பவர்கள் நால்வர் என்று கணிக்கப்படுகின்றது. எனவே இவர்களில் ஒருவரையே பெரும்பாலான வாக்காளர்கள் தேர்ந்தெடுக்கும் நிலை இருக்கின்றது.

வேட்பாளர்கள் ஒவ்வொருவரும் தேர்தல் அறிக்கை ஒன்றை வெளியிட்டிருக்கின்றார்கள். அதில் தமது கொள்கைகள் தொடர்பாகவும் தாம் மேற்கொள்ளப்போகும் திட்டங்கள் தொடர்பாகவும்அறிவித்திருக்கின்றார்கள். அதுவும்தவிரபரப்புரை மேடைகளில் வாக்குறுதிகளை அள்ளிக் கொட்டியுள்ளார்கள். சலுகைகளை அறிவித்துள்ளார்கள். தாம் பதவிக்கு வந்தால் செய்யப்போகும் திட்டங்களை அறிவித்துள்ளார்கள். சிலர் அரசுத் தலைவராகும் நோக்கமின்றி வேறு நோக்கத்தோடும் போட்டியில் நிற்கின்றார்கள். தான் சார்ந்த மக்களுக்காக நிற்கின்றேன் என்கிறார்கள். இவர்கள் எல்லோ–ருடைய கூற்றுக்களையும் ஆய்வு செய்து, எது உண்மை, எது சாத்தியமானது, எது உங்கள் தேவை என்பதைப் புரிந்துகொண்டு வாக்காளர்கள் வாக்களிக்கவேண்டும்.

பணத்திற்கோ சலுகைகளுக்கோ தொழில் வாய்ப்புக்களுக்காகவோ வாக்களிப்பதைத் தவிர்க்க வேண்டும். இந்த வாக்களிப்பு அடுத்து வரும் 5 வருடங்களின் தலைவிதியைத் தீர்மானிக்கப் போகின்றன என்பதால் சிநித்துச் செயற்படுவது ஒவ்வொ–ரு வாக்காளரதும் கட்டாயக் கடமை. உணர்ந்து செயற்படுவீர்களாக!

# பூனைக் கறி அரசியல்!



அமெரிக்காவில் புலம்பெயர்ந்து வந்துள்ள மக்கள் பூனைக் கறி தின்பதாக ஒஹையோவிலுள்ள ஸ்பிரிங்ஃபீல்டைச் சேர்ந்த ஒரு பெண் சமூக ஊடகங்களில் பகிர்ந்த நிலைத் தகவல் அமெரிக்க அதிபர் தேர்தல் பரப்புரையையே ஆட்டிவைத்துக் கொண்டிருக்கிறது.

அமெரிக்காவில்வரும்நவம்பர்5நடைபெறவுள்ள அதிபர் பதவிக்கான தேர்தலில் ஜனநாயகக் கட்சி சார்பில் தற்போதைய துணை அதிபர் கமலா ஹாரிஸும் குடியரசுக் கட்சியின் சார்பில் முன்னாள் அதிபர் டொனால்ட் டிரம்ப்பும் போட்டியிடுகின்றனர். விறுவிறுப்பாகத் தேர்தல் பரப்புரைகள் நடந்துகொண்டிருக்கின்றன.

ஹைதி நாட்டிலிருந்து புலம்பெயர்ந்து வந்திருப்போர் வளர்ப்புப் பூனைகளைக் கொன்று இறைச்சியை உண்கிறார்கள் என்பதாக மற்றொரு நண்பரின் மகளிடமிருந்து தெரிந்த ஒரு நண்பர் மூலமாகக் கேள்விப்பட்ட இன்னொரு நண்பரின் வழியே தாம் அறிந்ததாக அந்தப் பெண் குறிப்பிட்டிருக்கிறார். ஆனால், இப்படியெல்லாம் நம்பத்தகுந்த எந்தத் தகவலும் இல்லை என்றும் புலம்பெயர் மக்களிடையே வளர்ப்புப் பிராணிகள் துன்புறுத்தப்படுவதாகவோ, கொல்லப்படுவதாகவோ எவ்விதமான புகார்களும் வரவில்லை என்றும் ஸ்பிரிங்ஃபீல்ட்நகர்அலுவலர்கள்மறுத்திருக்கின்றனர்.

இன்னொரு பக்கம் அரோராவில் குடியிருப்பு வளாகங்களை வெனிசுவேலாவிலிருந்து வந்திருக்கும் மக்கள் கூட்டம் கைப்பற்றியதாகப் பரவிய தகவல்களையும் கொலராடோ அலுவலர்கள் மறுத்திருக்கின்றனர். இந்த நகரில் இருக்கும் வெனிசுவேலா மக்களின் எண்ணிக்கையே மிகவும் குறைவு என்றும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.



பூனையைக் கொன்று ஒரு பெண் சாப்பிட முயலுவதைப் போல சமூக ஊடகங்களில் பரவிவரும் ஒரு விடியோவும்கூட ஒஹையோ மாகாணத்தில் கான்டன் நகரிலிருந்துதான் எடுக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது, ஸ்பிரிங்ஃபீல்டிலிருந்து அல்ல. தவிர, இந்த விடியோவில் இடம்பெற்றிருக்கும் பெண்ணும் அமெரிக்கக் குடிமகள்தான்; இவருக்கும் ஹைதிக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை. மேலும் கலங்கலான ஒரு புகைப்படத்தில் ஒரு மனிதன் எடுத்துச் செல்வது செத்துப்போன ஒரு வாத்து போலதான் தெரிகிறது. இதுவும் கொலம்பஸ் என்ற வேறொரு நகரில் எடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், இவ்வாறு உதிரிகளாகப் பரப்பப்படும் காணொலி, ஒளிப்படங்களை எல்லாம் ஒன்றுதிரட்டி, குடியரசுக் கட்சி வேட்பாளரான டொனால்ட் டிரம்ப், புலம்பெயர் மக்களுக்கு எதிரான அவருடைய வழக்கமான பரப்புரையின் ஒரு பகுதியாக, 'ஸ்பிரிங்ஃபீல்டில் தொடங்கி புலம்பெயர்ந்து வந்திருப்போரை நாட்டைவிட்டு வெளியேற்றுவோம்' என்று அறிவித்திருக்கிறார்.

இதிலென்ன கொடுமையெனில், இவர்களில் பெரும்பாலானோர் 'தாற்காலிகமாகப் பாதுகாக்கப்பட்ட தகுதிநிலை' என்ற திட்டத்தின் கீழ் அமெரிக்காவில் சட்டப்பூர்வமாகத்தான் தங்கியிருக்கிறார்கள்!

"நம் நாட்டின் வரலாற்றில் விரைவில் மிகப்பெரிய அளவிலானநாடுகடத்தல்நடைபெறவிருக்கிறது" என்று



கலிபோர்னியாவில்ராஞ்சோபாலோஸ்வெர்தஸிலுள்ள டிரம்ப் தேசிய கோல்ப் கிளப்பில் செய்தியாளர்களுடன் பேசிய டிரம்ப் தெரிவித்துள்ளார். "ஸ்பிரிங்ஃபீல்ட், அரோராவிலிருந்துதான் நாங்கள் தொடங்கப் போகிறோம்'' என்றும் குறிப்பிட்டிருக்கிறார் டிரம்ப்.

ஸ்பிரிங்ஃபீல்டில் புதிய பாசிச தீவிரவாதகுழுவான"பெருமைகொண்ட இளைஞர்கள் (ப்ரௌட் பாய்ஸ்)'' பேரணியாகச் சென்றதும் நகரில் புலம்பெயர் குழந்தைகள் படிக்கும் பள்ளிகளுக்குவெடிகுண்டுமிரட்டல்கள் வந்ததும் போன்றவற்றுடன் சேர்த்து, டிரம்பின் இந்த அறிவிப்பால் மிகுந்த உற்சாகமும் மகிழ்ச்சியும் அடைந்திருக்கிறார்கள் டிரம்பின் அடிப்படைவாத ஆதரவாளர்கள். ஆனால், ''இந்த வெடிகுண்டு மிரட்டல்கள் பற்றியெல்லாம் தனக்கு எதுவும் தெரியாது" என்றிருக்கிறார் டிரம்ப்.

''ஸ்பிரிங்ஃபீல்ட் மிகவும் அழகான நகர். இப்போது நரகமாகிக் கொண்டிருக்கிறது. இது மிகவும் துயரமானது. நான் இருந்தால் இப்படி நடக்காது. இப்போதே சொல்லிக் கொள்கிறேன்'' என்றும் எச்சரித்துள்ளார் டிரம்ப்.

டொனால்ட் டிரம்ப் பேசுகிற பேச்சையும் பரப்புரையையும் பார்த்தால் இரண்டாம் உலகப் போர்க் கால இடைத்தங்கல் முகாம்கள்தான் நினைவுக்கு வருகின்றன என்பதாக அமெரிக்க

தொடர்ச்சி 5ம் பக்கம்...........

# பூனைக் கறி அரசியல்!

4ம் பக்க தொடர்ச்சி...........



மக்கள் அச்சம் கொள்கின்றனர்.

அமெரிக்காவில் தற்போது சட்டவிரோதமான புலம்பெயர் மக்கள் சுமார் 1.20 கோடி பேர் இருப்பதாகத்தான் மதிப்பிடப்படுகிறது. ஆனால், இந்த எண்ணிக்கையையும் 2 கோடி என்பதாகக் குறிப்பிடுகிறார் டிரம்ப். கொலராடோவில் குடியிருப்புகளைவெனிசுவேலாகூட்டத்தினர்கைப்பற்றுவதாகக் கூறப்படுவதைப் பற்றிக் குறிப்பிடும்போது, ''இவர்களை வெளியேற்றுவதுதான் ரத்தக் களரியாகப் போகிறது'' என்கிறார் அவர்.

புலம்பெயர் மக்களைக் கொண்டு தங்களையும் தனது பொருளாதாரத்தையும் அமெரிக்காவிலுள்ள நகரங்கள் புதுப்பித்துக் கொள்வதென்பது வழக்கமான ஒன்றுதான். சுமார் 40 ஆயிரம் மக்கள்தொகை கொண்ட லெவிஸ்டன் நகரம், தொடக்கத்தில் வெள்ளை இனத்தவரின் எதிர்ப்பு இருந்தபோதிலும்கூட, 1999-இல் தொடங்கிக் கூடுதலாக 12 ஆயிரம் சோமாலியாவைச் சேர்ந்த புலம்பெயர் மக்களைத் தம் மக்களாக உள்வாங்கிக்கொண்டிருக்கிறது. இந்த நகரின் மறு உருவாக்கத்தில் சோமாலியர்கள் எந்த அளவுக்கு இணைந்திருக்கின்றனர் என்பது பாராட்டப்பட்டு வருகிறது. ஆனால், இந்த உண்மைகளையெல்லாம் -இன்னமும் ஹைதி மக்கள் நாய்களைத் தின்கிறார்கள், பூனைகளைத் தின்கிறார்கள், வாத்துகளைத் தின்கிறார்கள் (இதற்கு அதிபர் வேட்பாளர் டிரம்ப்பும் ஆமாம் போடுகிறார்) என்ற குற்றச்சாட்டுகளைக் கொண்டாடிக்கொண்டிருக்கும் டிரம்ப் ஆதரவு தீவிரவாதிகள் (அல்லது அடிப்படைவாதிகள்) ஒப்புக்கொள்ளமாட்டார்கள்.

அல்லாமல் நாய்கள், பூனைகளைக் கொன்று உண்பதற்காக தீயில் சுட வைப்பதைப் போன்றகொடூரமான விடியோக்களையும்புகைப்படங்களையும்-ஸ்பிரிங்ஃபீல்டிலுள்ள ஹைதி மக்களிடமிருந்து கிடைத்தவை என்று குறிப்பிட்டு- பகிர்ந்துகொண்டிருக்கின்றனர்.

இதனிடையேதான், ''பூனைக் கறி தின்னும் புலம்பெயர் மக்கள்" என்ற இந்த நிலைத்தகவலை சமூக ஊடகத்தில் பகிர்ந்த பெண்மணி, இதற்காகத் தாம் மிகவும் வருத்தப்படுவதாகத் தெரிவித்துள்ளார். "நான் ஏதோ சொல்லப் போனேன், ஆனால், இப்படியெல்லாம் நடக்கும் என்று எதிர்பார்க்கவேயில்லை. நான் இனவெறி கொண்டவள் அல்ல'' என்று செய்தி நிறுவனம் ஒன்றுக்கு அளித்த பேட்டியில் எரிகா லீ என்ற அந்தப் பெண் தெரிவித்துள்ளார். கூடவே, ''நானும் என் மகளும் வெவ்வேறு இனப் பின்னணியிலிருந்து வந்தவர்கள், தவிர, பால்புதுமையாளரும்கூட (எல்ஜிபிடிக்யு)'' என்றும் அறிவித்துள்ளார். உள்ளபடியே இந்தமுறை, 2024ஆம் ஆண்டு, அமெரிக்க அதிபர் தேர்தலும் தேர்தல் பரப்புரையும் முன்னெப்போதுமில்லாத அளவுக்குக் 'கன்னாபின்னா'வெனச் சென்றுகொண்டிருக்கிறது எனலாம்.

தேர்தல் பரப்புரையின்போது திடீரெனக் குடியரசுக் கட்சி வேட்பாளரும் முன்னாள் அதிபருமான டொனால்ட் டிரம்ப் சுடப்பட்டார். காதோடு காயப்படுத்திவிட்டுத் துப்பாக்கிக் குண்டு போய்விட உயிர் தப்பிய டிரம்ப், பிளாஸ்திரி ஒட்டிய காதையே அணிகலனாக்கிப் பரப்புரையைத் தொடர்ந்தார். இன்னமும் இதன் மர்ம முடிச்சே அவிழ்க்கப்படவில்லை (அதற்குள்ளாக டிரம்ப்பின் கோல்ப் திடலுக்கு வெளியே அவரைக் கொலை செய்ய ஒருவர் காத்திருந்ததாக இன்னொரு கொலை முயற்சி செய்தியும் வந்துவிட்டது).

வழக்கத்துக்கு முன்னதாக நடந்த குடியரசுக் கட்சி வேட்பாளர் டொனால்ட் டிரம்புடன் நடந்த நேருக்கு நேர் விவாதத்தில் ஜனநாயகக் கட்சி வேட்பாளராக அறிவிக்கப்பட்டிருந்த தற்போதைய அதிபர் ஜோ பைடன், முதுமை, மறதி காரணமாகச் சொதப்பிவிட வேட்பாளராகத் துணை அதிபர் கமலா ஹாரிஸ் அறிவிக்கப்பட்டார்.

அதிபர் ஜோ பைடனை எதிர்த்து டிரம்ப் வெற்றி பெறுவது எளிது எனப் பரவலாகக் கருதப்பட்ட நிலையில், கமலாவின் எதிர்பாராத என்ட்ரி அதிர்ச்சியளிக்க, குழாயடிச் சண்டை போல, கமலா ஹாரிஸுக்கு எதிராகத் தரைமட்டத்துக்கு இறங்கிவந்து பேச - பரப்புரை செய்யத் தொடங்கியிருக்கிறார் டிரம்ப்.

கறுப்பு- இந்திய கலப்பினத்தவரான கமலா ஹாரிஸுக்கு எதிராக வெள்ளை இனத்தவர் - மற்றும் அடிப்படைவாதிகளின் வாக்குகளை முழுமையாகத் திரட்டக் கருதிப் பொய்யான பல்வேறு பரப்புரைகளையும்கூட டிரம்ப்பும் அவருடைய ஆதரவாளர்களும் கட்டவிழ்த்து விடுகின்றனர் எனக் குற்றம் சாட்டுகின்றனர்.

இதனிடையே, டொனால்ட் டிரம்புக்கும் கமலா ஹாரிஸுக்கும் இடையே நேருக்கு நேர் விவாதம் நடைபெற்றது. விவாதத்தில் பல வகையிலும் டிரம்ப்பை அம்பலப்படுத்தினார் கமலா. இதைத் தொடர்ந்து, அதிபர் தேர்தலில் கமலாவுக்கு ஆதரவு அதிகரித்திருப்பதாக ஆய்வுகள் வெளிவரத் தொடங்கின.

இந்த நிலையில் அமெரிக்கர்களிடையே புலம்பெயர் மக்களுக்கு எதிரான உணர்வுகள் தூண்டிவிடப்படுகின்றன. சமூக ஊடகங்களில் நிறைய மீம்கள் உருவாக்கப்பட்டுப் பரப்பப்படுகின்றன. நாய்கள், பூனைகளின் காப்போன் போல டிரம்பைச் சித்திரித்தும் பூனைக் கறி விருந்துக்கு வரவேற்பதைப் போல கமலாவைக் காட்டியும் மீம்கள் தூள் பறக்கின்றன.

அதிபர் தேர்தலுக்கு இன்னமும் சரியாக 50 நாள்கள் இருக்கின்றன. அடுத்தடுத்து இரு வேட்பாளர்களுக்கும் இடையே நேருக்கு நேர் விவாதங்கள் நடைபெறவும் வாய்ப்புகள் இருக்கின்றன. இன - வெறுப்பு அரசியலை மையமாகக் கொண்டு இப்போது பூனைக்கறி, நாய்க்கறி என்றெல்லாமும் வரத் தொடங்கியிருக்கின்றன. வாக்குப் பதிவு நெருங்க, நெருங்க இன்னும் என்னவெல்லாம் நடைபெறப் போகின்றனவோ? வல்லரசுக்குத்தான் வெளிச்சம்!

தேர்தல் என்று வந்துவிட்டால் சமூக ஊடகங்கள் பொய்களாலேயே நிரம்பி வழியும் போலும்! அது இலங்கையாக இருந்தாலென்ன, அமெரிக்காவாக இருந்தாலென்ன! எங்கும் ஒரே மாதிரித்தான்.






# தேர்தல் பதாகைகள், சுவரொட்டிகளை நீக்கும் பணியில் பொலிஸார் தீவிரம்

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தல் தொடர்பான இறுதி பிரசாரத்துக்கான நாள் புதன்கிழமை என அறிவிக்கப்பட்டுள்ளநிலையில்இ இன்றிலிருந்து தேர்தல் மற்றும் வேட்பாளர்கள் தொடர்பான பதாதைகள்இ சுவரொட்டிகளை காட்சிப்படுத்துவது தேர்தல் சட்ட விதிமுறை மீறல் என தேர்தல் ஆணைக்குழு தெரிவித் துள்ளது.

அதன்படிஇ வவுனியாவில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள ஒன்பதாயிரத்துக்கும் மேற்பட்ட பதாதைகள் மற்றும் சுவரொட்டிகளை நீக்கும் பணிகளை வவுனியா பொலிஸார் நேற்று காலை 8.30 மணி தொடக்கம் முன்னெடுத்து வருகின்றனர்.

வவுனியா தலைமை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சிரேஷ்ட பொலிஸ் பரிசோதகர் ஜெயக்கொடி தலைமையிலான 20 இற்கும் மேற்பட்ட பொலிஸார் தேர்தல் தொடர்பான சுவரொட்டிகளை நீக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.(05)

# சுற்றுலாச் சென்ற பஸ் விபத்து : மாணவர்கள் சிலர் படு காயம்

கம்பளை - நுவரெலியா வீதியில் பலகொல்ல பிரதேசத்தில் இடம்பெற்ற பஸ் விபத்தில் பாடசாலை மாணவர்கள் சிலர் காயமடைந்துள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து திங்கட்கிழமை இடம்பெற்றுள்ளது.

சுற்றுலாச் செல்வதற்காகப் பாடசாலை மாணவர்களை ஏற்றிச் சென்ற பஸ் ஒன்று வேகக் கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி அருகிலிருந்த தூணில் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தின் போது, பயணித்த மாணவர்கள் சிலர் காயமடைந்துள்ள நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

காயமடைந்தவர்களின் உடல் நிலைமை கலவைக்கிடமாக இல்லை என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.(05)

# மதுபான கடத்தலில் ஈடுபட்டவர் கைது

பமுனுகம பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதியில் மோட்டார் சைக்கிளில் சட்டவிரோத மதுபானத்தை கடத்திச் சென்ற சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பமுனுகம பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் ஜா - எல பகுதியைச் சேர்ந்த 45 வயதுடையவராவார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடமிருந்து 67 லீற்றர் 500 மில்லி லீற்றர் சட்டவிரோத மதுபானம் மற்றும் மதுபான கடத்தலுக்கு பயன்படுத்தப்பட்ட மோட்டார் சைக்கிள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் பமுனுகம பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.(05)

# வீடொன்றுக்குள் நுழைந்து பெருந்தொகையான பணத்தை கொள்ளையிட்ட 4 பொலிஸார் கைது

## கொழும்பில் சம்பவம்

கொழும்பு- முகத்துவாரம் பிரதேசத்தில் உள்ள வீடொன்றிற்குள் அத்துமீறி நுழைந்து பெருந்தொகை பணத்தை திருடியதாக கூறப்படும் நான்கு பொலிஸ் உத்தியோகத்தர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

புளுமெண்டல்பொலிஸ்நிலையத்தில்கடமையாற்றும் நான்கு பொலிஸ் உத்தியோகத்தர்களே கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள்நால்வரும்முகத்துவாரம்பிரதேசத்தில் உள்ள வீடொன்றிற்குள் அத்துமீறி நுழைந்து அங்கிருந்த வீட்டு உரிமையாளரை அச்சுறுத்தி 1.4 மில்லியன் ரூபா பணத்தை கொள்னையிட்டுச் சென்றுள்ளனர் என பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.ம

(05)

# உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கியுடன் ஒருவர் கைது

மாங்குளம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பனிச்சங்குளம் பகுதியில் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கியுடன் சந்தேக நபரொருவர் செவ்வாய்க்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

மாங்குளம் பொஸாருக்கு கிடைத்த தகவலுக்கமைய சுற்றிவளைப்பு முன்னெடுக்கப்பட்டபோதேகுறித்தகைதுநடவடிக்கைமேற்கொள்ளப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர் கிளிநொச்சி பகுதியைச் சேர்ந்த 26 வயதுடையவராவார். இதனையடுத்துஇ இந்த சம்பவம் தொடர்பில் மாங்குளம்பொலிஸார்மேலதிகவிசாரணைகளைமுன்னெடுத்துவருவதாக தெரிவித்துள்ளனர். (05)



காலைக்கதிர் Kalaikkathir

# பஸ்ஸில் ஏற முயன்ற பெண் சில்லுக்குள் சிக்கி உயிரிழப்பு

நாவலமுல்ல – மீகொடை வீதியில் சிரிமெதுரவத்த பிரதேசத்தில் பஸ்ஸின் சில்லுக்குள் சிக்கி பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து புதன்கிழமை அதிகாலை இடம்பெற்றுள்ளது.

மீகொடதெனிய பிரதேசத்தைச் சேர்ந்த 57 வயதுடைய பெண்ணொருவரே உயிரிழந்துள்ளார்.

இவர் மற்றுமொரு நபருடன் சேர்ந்து தனியார் பஸ் ஒன்றில் ஏறுவதற்கு முயன்ற போது பஸ்ஸின் மிதிபலகையிலிருந்து தவறி வீழ்ந்து பஸ்ஸின் சில்லுக்குள் சிக்கி உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்த பெண்ணின் தலையில் பலத்த காயம் ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதனையடுத்து, விபத்தை ஏற்படுத்திய பஸ்ஸின் சாரதி வேகமாக பஸ்ஸை செலுத்தி சம்பவ இடத்திலிருந்து தப்பிச் சென்றுள்ளார் எனப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மீகொடை பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர்.(05)

# அமைச்சர் ஜீவன் தொண்டமானின் தலைமையில் 'மலையக சாசனம்'



இலங்கை நாட்டில் பொருளாதார,சமூக மற்றும்கலாசாரகட்டமைப்பில்பெருந்தோட்ட சமூகம் முக்கிய பங்கை தொடர்ந்து வகித்து வருகிறது இந்திய வம்சாவளி தமிழ் (மலையக தமிழர்) பெருந்தோட்ட சமூகம் இலங்கைக்கு வருகை தந்து 200 வது ஆண்டு நிறைவை கௌரவிக்கும் முகமாக 'மலையக சாசனம்' வெளியீடு உத்தியோகபூர்வமாக செவ்வாய்க்கிழமை மாலை நீர் வழங்கள் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சரும், இ.தொ.கா பொதுச் செயலாளருமான ஜீவன் தொண்டமானின் தலைமையில் நுவரெலியாவில் தனியார் ஹோட்டல் ஒன்றில் நடைபெற்றது.

இதன் போது அமைச்சர் ஜீவன் தொண்டமான் வரவேற்புரை ஆற்றியதுடன்இ கொள்கை மாற்றுகள் மையத்தின் ஸ்தாபக நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து சிறப்பு உரையை ஆற்றினார்.

இவ் சாசனத்தில் ஏனைய சமூகத்தினர் போல் பெருந்தோட்ட சமூகத்தினரின் வாழ்க்கை அமைய வேண்டும் பெருந்தோட்ட சமூகம் இனியாவது ஓரங்கட்டப்பட்ட குழுவாகக் காணப்படாமல் தேசிய அடையாளத்தின் ஒரு அங்கமாக திகழ வேண்டும் போன்ற சில முக்கிய கோரிக்கைகளை உள்ளடக்கிய வண்ணம் குறித்த சாசனம் இலங்கை அரசாங்கத்தின் வேலைத்திட்டம் மற்றும் மலையக பெருந்தோட்ட சமூகத்திற்கான அர்ப்பணிப்புக்கான அடிப்படை ஆவணத்தை பிரதிநிதித்துவப்படுத்தி குறித்த சாசனம் வெளியீடு செய்யப்பட்டுள்ளது.

குறித்த நிகழ்வில், புத்தி ஜீவிகள், சட்டத்தரணிகள், பேராசிரியர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், சிவில் அமைப்பினர், வர்த்தகர்கள், துறைசார் ஆர்வலர்கள், துறைசார் நிபுணத்துவம் வாய்ந்தவர்கள், அமைச்சின் அதிகாரிகள், என பலரும் கலந்துக்கொண்டிருந்தனர்

இந்நிழ்வில் குறித்த சாசனத்தில் உள்ளடக்கிய 14 முக்கிய அம்சக் குறிக்கோள்களை முன்வைத்து தேர்ச்சி பெற்றவர் மூலம் பெருந்தோட்ட மக்களின் வாழ்வியல் வரலாறு மற்றும் எதிர்காலத்தில் தேவையான பெறுமதி மிக்க சேவைகளையும் டிஜிற்றல் திரையில் காண்பித்து தெளிவூட்டல் செய்து கலந்துரையாடப்பட்டது.(05)

# சுதந்திரக் கட்சி அமைப்பாளர் பொல்லால் அடித்துக்கொலை

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் காலி ஹினிதும தொகுதியின் பிரதான அமைப்பாளரான சம்பத் கமகேவின் வீட்டிற்குள் சென்ற இனந்தெரியாத நபரொருவர் அவரை பொல்லால் தாக்கி கொலை செய்துள்ளதாக மீகொடை பொலிஸார் தெரிவித்தனர்.

ஹோமாகம பனாகொட சமகி மாவத்தையில் உள்ள அவரது வீட்டில் வைத்து இந்த கொலை சம்பவம் இடம்பெற்றுள்ளது.

விசாரணையின் போதுஇ கொலைசெய்யப்பட்டவரின் தகாத உறவு குறித்து பல தகவல்கள் வெளியாகியுள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது -

ஹோமாகம பனாகொட சமகி மாவத்தைக்கு ஓட்ஹி;டாவில் சென்ற இனந்தெரியாத நபரொருவர் வீடொன்றிற்குள் அத்துமீறி நுழைந்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பிரதான அமைப்பாளரான சம்பத் கமகேவை பொல்லால் தாக்கியுள்ளார்.

இதனையடுத்துஇ காயமடைந்தவர் ஹோமாகம ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர் தொடர்பில் இதுவரை எந்தவித தகவல்களும் கிடைக்கவில்லை என பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மீகொடை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(05)

# வெல்லவாய காட்டுக்குள் பரவிய தீ கட்டுக்குள்

வெல்லவாய பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட கிரியகொல்ல காட்டுப்பகுதியில் ஏற்பட்ட தீ பரவல் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது.

இந்த தீ பரவல் செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஏற்பட்டுள்ளது.

இரவு முழுவதும் தீ பரவியதால், காட்டுப்பகுதியின் பத்து ஏக்கர் நிலப்பரப்பு எரிந்து நாசமாகியுள்ளது.

கடும் வறட்சி மற்றும் காற்றுடன் கூடிய வானிலை காரணமாக இந்த தீ பரவல் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், புதன்கிழமை காலை இந்த தீ முற்றாக கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (05)




காலைக்கதிர் Kalaikkathir

## தேர்தல்....

(இரண்டாம் பக்கத் தொடர்ச்சி)

துஷ்பிரயோகம் செய்யப்பட்டுள்ளமையை அவதானிக்கமுடிகின்றது. குறிப்பாக வாகன இறக்குமதித்தடை நீக்கப்படல், புதிதாக இராஜாங்க அமைச்சர்கள் நியமிக்கப்படல், எதிர்வரும் காலத்தில் நிதிக்கொடுப்பனவுகளை வழங்குவதாக வாக்குறுதியளிக்கப்படல் போன்றனவும் அதில் உள்ளடங்குகின்றன. இருப்பினும் இதற்குரிய முன்னேற்பாடுகளோ அல்லது நிதி ஒதுக்கீடுகளோ வரவு, செலவுத்திட்டத்தில் மேற்கொள்ளப்பட்டிருப்பதை அவதானிக்கமுடியவில்லை. எனவே இவற்றை நாம் தேர்தல் முறைகேடுகளாகவே கருதுகின்றோம்.

அதேவேளை ஒவ்வொரு வேட்பாளர்களுக்கும் பிரதான தொலைக்காட்சி அலைவரிசைகளின் பிரதான செய்தி வேளையில் ஒதுக்கப்பட்டிருக்கும் நேரத்தின் அளவு மற்றும் வேட்பாளர்களால் தொலைக்காட்சி அலைவரிசைகளுக்கு வழங்கப்பட்டிருக்கும் விளம்பரங்களின் மொத்தப்பெறுமதி என்பனவும் எம்மால் கண்காணிப்புக்கு உட்படுத்தப்பட்டிருக்கின்றன. அதன்படி பெரும்பாலான தொலைக்காட்சி அலைவரிசைகளில் சகல வேட்பாளர்களுக்கும் சமத்துவமான வாய்ப்பு வழங்கப்படாமையை அவதானிக்கமுடிகின்றது.

இது இவ்வாறிருக்க இம்முறை தேர்தலின் பின்னரும் வன்முறைகள் ஏற்படக்கூடிய சாத்தியப்பாடுகள் காணப்படுகின்றன. குறிப்பாக முதலாவதாக வாக்கு எண்ணப்பட்டு முதலாம் மற்றும் இரண்டாம் இடத்தில் இருக்கும் வேட்பாளர்களின் பெயர்கள் அறிவிக்கப்பட்டவுடன் அத்தகைய அமைதியின்மை ஏற்படக்கூடும். இருப்பினும் தேர்தல் முடிவுகள் முழுமையாக அறிவிக்கப்படும்வரை பொதுமக்கள் அமைதிகாக்கவேண்டும் என்று வலியுறுத்துகின்றோம். அதேபோன்று தேர்தல் முடிவுகள் யாதாயினும், அரச அதிகாரத்தை எந்தவொரு தரப்பினரும் முறைகேடாகப் பயன்படுத்துவதற்கு முயற்சிக்கக்கூடாது என்றார்.

## தமிழ்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆள் பிடிப்பவர் யாரெனத் தேடிப் பாருங்கள். இனவாத சிந்தனையை இந்த நாட்டில் ஊட்டி வளர்த்ததில் தமக்குள்ள பங்கை மறந்து விட்டு, இன்று திடீரெனத் தமிழ் பேசும் மக்கள் மீது பாசம் காட்டும் நபர்கள் யாரெனத் தேடி பாருங்கள்.

வரலாற்றில் மிக முக்கியமான கால கட்டமான இன்றைய வேளையில் இந்நாட்டில் வாழும் தமிழ் பேசும் மக்கள் அணி திரண்டு சென்று தொலைபேசி சின்னத்துக்கு வாக்களிக்க மிக தெளிவான காரணங்கள் இருக்கின்றன. மலையக தமிழ் மக்கள், வட கிழக்கு தமிழ் மக்கள், கொழும்பு, கம்பஹா மாவட்டங்களில் வாழும் தமிழ் பேசும் மக்கள் ஆகிய அனைவருக்கும் இதை நான் மிக தெளிவாகக் கூறி வைக்க விரும்புகிறேன்.

இந்த நாட்டில் நாம் எமது இறுதிக் கட்ட குடியுரிமையை 2003ஆம் ஆண்டில்தான் பெற்றோம். அதாவது, ஓட்டப் பந்தயத்தில் கடந்த 20வருடங்களாகதான் நாம் ஓடிக் கொண்டு இருக்கிறோம். இந்த ஓட்டத்தின் வேகத்தை அதிகரிக்கத்தான் தமிழ் முற்போக்கு கூட்டணி உருவானது. அதன் அடையாளமாக, இந்த 2024ஆம் ஓகஸ்ட் , வெற்றி வேட்பாளர் சஜித் பிரேமதாச உடன் நாம் புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றில் கையெழுத்து இட்டுள்ளோம். சகோதர ஈழத் தமிழ் வரலாற்றில் பண்டா-செல்வா ஒப்பந்தத்துக்கு சமனான, மலையக வரலாற்று ஒப்பந்தமே இந்த ஒப்பந்தம்.

தோட்ட தொழில் துறையில் 'சிஸ்டம்-சேன்ஜ்' என்ற முறைமை -மாற்றம், விவசாய காணி, தோட்டத்தில் வாழும் அனைவருக்கும் வீட்டு காணி என்ற எமது காணி உரிமையை இந்த உடன்படிக்கை உறுதி செய்கிறது. எம்மை எதிர்ப்போர் யார்? சற்று உற்று பாருங்கள். கடந்த ஐம்பது வருடங்களாக ஏறக்குறைய எல்லா ஆட்சிகளிலும் அங்கம் வகித்து விட்டு, இப்போதும்கூட எதுவும் செய்யாமல், வெறும் வாய் சவடால் மட்டும் அடிக்கும் ஒரு பிற்போக்கு கும்பல்.

இன்னொன்று, மலையக மக்கள் காணி உரிமை பெறுவதை தடுக்கும் இனவாதச் சிந்தனையை இந்நாட்டில் ஊட்டி வளர்த்ததில் இவர்களுக்கும் இருந்த பங்கை மறந்துவிட்டு, இன்று மலையக மக்கள் மீது திடீர் பாசம் கொண்டுள்ள நபர்கள். 2009ஆம் ஆண்டு போர் முடிவுக்கு பின், 'அமெரிக்கா வரும், ஐரோப்பா வரும், ஐ.நா வரும், சர்வதேசம் வரும், உலகமே உதவிக்கு வரும்', என்று நாம் 2024 வரை தந்த 15 ஆண்டு கால அவகாசத்தில் எவருமே வரவில்லை. தமது தேச நலன்களை மாத்திரம் கணக்கில் எடுக்கும் உலக ஒழுங்கில் எமது பிரச்சினை பின்னாலே போய் விட்டது.

அரசியல் யாப்பில் இருக்கும் 13ஆம் திருத்தத்தை அமுல் செய்து, நீண்ட காலமாக நின்று போய் இருக்கும் மாகாணசபை தேர்தல்களை நடத்தி, முதல் கட்டமாக வடக்கு, கிழக்கிலே மாகாண சபைகளை மீள உருவாக்கி, அடுத்த கட்டத்தை நோக்கி நகர, எமக்கு மூச்சு விடும் விதமாக தெளிவான உறுதியை தந்துள்ள வேட்பாளர் யார் என்று தேடி பாருங்கள்.

ஒன்று, சொந்த வீடில்லா நிலைமை, சொந்த வீடு இருந்தும் ஒரே வீட்டுக்கு உள்ளே, பல குடும்பகள் ஒடுங்கி வாழ வேண்டிய நிலைமை, சொந்த வீட்டுகனவுடன் வாழ்நாள் முழுக்க வாடகை வீட்டிலேயே வாழும் நிலைமை. இரண்டாவது, தம் குழந்தைகளின் கல்விக்காக தகைமையுள்ள பாடசாலைகளை தேடி அலையும் நிலைமை. பாடசாலைகளில் விஞ்ஞானம், கணிதம், ஆங்கிலம், தொழில் நுட்பம் ஆகிய போதனைகளையும், ஆசிரியர்களையும் கொண்டிராத நிலைமை, இதனால் தமது பிள்ளைகளுக்கு தரமான கல்வியை பெற முடியாத நிலைமை.

வீடில்லாத குடும்பங்களுக்கு சொந்த வீடு வழங்கும், தனது தந்தை ரணசிங்க பிரேமதாசவின் கொள்கையை, சஜித் தன்னுள்ளே இயல்பாகவே கொண்டுள்ளார். எதிர்க் கட்சி தலைவராக இப்போதே, பாடசாலைகளுக்கு உதவிகள் செய்து சஜித் பிரேமதாச சாதனை படைத்துள்ளார். வீடு, பாடசாலை தொடர்பாக, தெளிவான உறுதியை தந்துள்ள சஜித் பிரேமதாசவின் தொலைபேசி சின்னத்துக்கு தைரியமாக சென்று வாக்களியுங்கள் என்றார்.

## 20 லட்சம் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

2024ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு ஐக்கிய மக்கள் கூட்டணி ஏற்பாடு செய்த 69ஆவது பரப்புரைக் கூட்டம் நேற்று எம்பிலிபிட்டிய நகரில் இடம்பெற்றது. அதில் உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்ததாவது:

ரணில் விக்கிரமசிங்க தன்னால் 'இயலும்' என்று சொல்கின்ற போது, அவருடைய சகாக்கள் அநுரகுமார திசாநாயக்கவால் 'இயலும்' என்று சொல்கின்றார். ரணில் இயலும் என்று சொன்னாலும் புலமை பரிசில் பரீட்சையைக்கூட அவரால் முறையாக நடத்த முடியவில்லை. பரீட்சைக்கு முன்பே வினாத்தாள் வெளியாகி இருக்கின்றது.

இந்த வெற்றியை அமைதியான முறையில் கொண்டாட வேண்டும். மாற்றுக் கருத்துக் கொண்டுள்ள எவரையும் எதிரியாகப் பார்க்காது அவர்களையும் இணைத்துக் கொள்ளவேண்டும். இது மத சார்பற்ற நாடு. இந்த நாட்டு பிரஜைகள் தமக்கு விரும்பிய மதத்தை பின்பற்றுவதற்கான உரிமையை வழங்குவோம். இது மத சார்பற்ற நாடு. தமது மதத்திற்கான, கலாச்சாரத்திற்கான உரிமையுள்ள நாடு. அதனை நாம் மேம்படுத்துவதோடு நாட்டின் தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்துவோம். போதைப் பொருளிலிருந்து ஆறு மாதங்களுக்குள் நாட்டை மீட்டெடுப்போம்.

ஜேவிபி, மொட்டு, திசைகாட்டி ஐக்கிய தேசிய கட்சி போன்ற கட்சிகளில் உள்ளவர்கள் தவறான முடிவுகளை எடுக்கவேண்டாம் எனக் கேட்டுக்கொள்கின்றோம். உங்களுடைய வாக்குகளை வீணடிக்காது ஐக்கிய மக்கள் சக்திக்கு ஆதரவை வழங்குமாறு வேண்டுகோள் விடுகின்றோம். முழு நாட்டையும் ஐக்கியப்படுத்தி ஒற்றுமையுடனும், நட்புடனும், நல்லிணக்கத்துடனும் நாட்டை வலுப்படுத்துவதோடு, இந்த நாட்டை கட்டி எழுப்புவோம்.

இலஞ்ச ஊழலை முதலில் ஒழிப்போம். சிலரைப் போன்று கட்டுக்கட்டாக பைல்களை வைத்துக்கொண்டு திருடர்களை பிடிப்போம் என்று பேசிக் கொண்டிருக்க மாட்டோம். எதிர்க்கட்சியில் இருந்துகொண்டு திருடர்களைப் பிடித்திருக்கின்றோம். சொல்வதைச் செய்கின்ற குழு ஒன்று எம்மோடு இருப்பதால் நம்மிடம் அரசியல் 'டீல்' இல்லை.

விவசாயத்தை மேம்படுத்துவதற்காக 50 கிலோ கிராம் உரத்தை 5000 ரூபாவுக்கு வழங்குவோம். பல்வேறு வகையான விவசாயங்களில் ஈடுபடுகின்ற விவசாயிகளுக்கு நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய விவசாய நகரங்களை உருவாக்குவோம். புதிய தொழில்நுட்பத்தின் ஊடாகவே நாட்டை கட்டியெழுப்ப வேண்டும் என்பது ஐக்கிய மக்கள் சக்தியின் எதிர்பார்ப்பாகும். ரணில் விக்ரமசிங்க அரசாங்கம் இந்த நாட்டில் உள்ள சொத்துக்களையும் வளங்களையும் விற்பனை செய்கின்றது.

தொழிற்சாலைகளை மூடுகின்றவர்களும் கொளுத்துகின்றவர்களும் இன்று ஒன்றாக சேர்ந்துள்ளனர் ரணசிங்க பிரேமதாச ஜனாதிபதி இந்த நாட்டில் தொழிற்சாலைகளை உருவாக்கினாலும், தற்போதைய அரசாங்கம் தொழிற்சாலைகளை மூடி முதலீட்டாளர்களை வெளியேற்றுகின்றார்கள்.

ரணசிங்க பிரேமதாச ஜனாதிபதி இந்த நாட்டில் தொழிற்சாலைகளை உருவாக்கினாலும், தற்போதைய அரசாங்கம் தொழிற்சாலைகளை மூடி முதலீட்டாளர்களை வெளியேற்றுகின்றார்கள். அடுத்த மாற்று குழுவினர் தொழிற்சாலைகளுக்கு தீவைக்கின்றார்கள். ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கம் புதிய தொழிற்சாலைகளை உருவாக்கி தொழில் வாய்ப்பின்மை பிரச்சினைக்கு தீர்வினை பெற்றுக்கொடுக்கும்.

அனைத்து இடங்களிலும் சிலர் வன்முறைகளை தூண்டி அச்சத்தை உருவாக்கி ஒடுக்கி மக்களின் வாக்குரிமையை இல்லாது செய்ய முயற்சிக்கின்றனர். இலங்கை என்பது ஜனநாயக நாடாகும். மக்களுடைய சுதந்திரம் விருப்பம் என்பனவற்றை மையமாகக் கொண்டு வாக்களிப்பதற்கான சந்தர்ப்பத்தை வழங்க வேண்டும். அச்சுறுத்தல்களையும் ஒடுக்கு முறைகளையும் தீவிரவாதத்தையும் வியாபிக்கின்ற அனைவரையும் சட்டத்தின் முன் நிறுத்துவோம். எனவே 220 இலட்சம் மக்களும் எந்தவித அச்சமுமின்றி செப்டெம்பர் 21 தொலைபேசிக்கு வாக்களித்து உங்கள் பலத்தை வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றேன் என்றார்.

## தேர்தலில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பம்பலப்பிட்டியில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்தபோது அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கை மக்களுக்கு பொதுவாகக் காணப்படும் சவால்களைப் பற்றியே பேசுகின்றனர். அரச உத்தியோகத்தர்களுக்கான சம்பளம் அதிகரிக்கப்பட்டுள்ளது. பெருந்தோட்ட மக்களின் சம்பளமும் அதிகரிக்கப்பட்டுள்ளது. தேவையேற்படின் அந்த மக்களைப் பாதுகாப்பதற்கான சட்டங்களையும் அறிமுகப்படுத்துவோம். ஏனையயோரைப் போன்று அவர்களும் கண்ணியத்துடன் வாழ வேண்டும்.

அனைத்து இனமக்களது தேவைகளையும் நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றோம். இன பேதமின்றி மக்களின் பிரச்சினைகளை தீர்க்கக்கூடிய தலைவர் ரணில் விக்கிரமசிங்க மாத்திரமே.

சில விடயங்களுக்கு எதிர்ப்பு வெளியிடப்பட்டாலும், அவர் துணிச்சலுடன் தீர்மானங்களை எடுக்கின்றார். இதற்கு முன்பிருந்த தலைவர்கள் ஏனையோருக்கு பயந்து சிறுபான்மை மக்களுக்கான தீர்மானங்களை எடுப்பதற்குப் பின்வாங்குவார்கள். மாற்றம் ஒன்று ஏற்பட வேண்டும் என்றால் அது நன்மைக்கான மாற்றமாகவே இருக்கவேண்டும். மாறாக வீழ்ச்சிக்கான மாற்றமாக இருக்கக்கூடாது.

மக்களைப் பெரும் நெருக்கடிக்கு உள்ளாக்கும் வகையிலேயே இன்று பங்களாதேஷில் மாற்றம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. பொருளாதாரத்தில் தற்போதுள்ள நிலைமையை ஸ்திரப்படுத்திக் கொள்வதற்கு ரணில் விக்கிரமசிங்கவிடம் மீண்டும் நாட்டை ஒப்படைக்க வேண்டும் என்றார்.

## தேர்தலில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டாம்.

123456 போன்ற பல இலக்கங்களையும் குறிக்க வேண்டாம்.

இந்த அனைத்து வாக்குகளும் நிராகரிக்கப்படும் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் குறிப்பிட்டுள்ளார்.

## விசேட....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலகுவாக வாக்களிக்கவும் வாக்குச் சீட்டினை தொட்டுணரக்கூடிய வகையிலும் தேர்தல்கள் ஆணைக்குழு ஏற்பாடுகளை செய்துள்ளதாக தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் 'வாக்காளர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்வு' நேற்று தேர்தல்கள் ஆணைக்குழுவில் இடம்பெற்ற போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

தேர்தல் அன்று வாக்காளர்களுக்கு ஒரு தரப்பினர் போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பது சட்ட விரோதமானது. இயலாமையுடையவர்களுக்கு போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்திக்கொடுப்பதாயின் அதற்கு தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலர்களிடம் அனுமதி பெற வேண்டும் எனவும் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்தார்

வாக்காளர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்வானது தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ரத்நாயக்க, தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க, தேர்தல்கள் மேலதிக ஆணையாளர் எஸ்.அச்சுதன் மற்றும் பிரதித் தேர்தல்கள் ஆணையாளர் கே.ஜே.எஸ்.மாதவ ஆகியோரின் தலைமையின் கீழ் இடம்பெற்றது.

இடம்பெறவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலில் வாக்காளர்கள் எவ்வாறு செயற்படவேண்டும் எனவும் எவ்வாறு தமது வாக்குகளை இடவேண்டும் எனவும் வாக்காளர்களுக்காகத் தேர்தல்கள் ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்பட்டுள்ள செயற்பாடுகள் குறித்தும் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க மற்றும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் மேலதிக ஆணையாளர். எஸ் அச்சுதன் ஆகியோரினால் எடுத்துரைக்கப்பட்டது.

தேர்தல் பரப்புரை முடிவடைவதுடன் அமைதி காலம் பிறப்பிக்கப்படுவதாகத் தெரிவித்தனர். எனவே இதனைக் கருத்திற்கொண்டு அச்சு ஊடகங்களும் சமூக ஊடகங்களும் தேர்தல் தொடர்பான செய்தி வெளியீட்டு நடவடிக்கைகளைப் பின்பற்ற வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டனர்.

## ரணிலுக்கும் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதியின் பாதுகாப்பிற்கும் இளைப்பாறிய ஜனாதிபதிகளுக்கும் பாதுகாப்பாக இருக்கும் பிரதிப் பொலிஸ் அதிபர்தான் அந்தக் கடிதத்தை எழுதி இருப்பார் என்பதை ஊகிக்க முடியும். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் தமிழ் பொதுவேட்பாளருக்கும் இடையில் இருக்கும் தொடர்பு தற்போது அம்பலமாகிக்கொண்டிருக்கின்றது. ஜனாதிபதியின் நேரடிக் கண்காணிப்பில் இருக்கின்ற பிரதிப் பொலிஸ் மா அதிபர், தேர்தல் நேரத்தில் அரியநேத்திரனுக்கு ஆதரவு பெருகுகின்றது என்று குறிப்பிட்டு அதனால் நானும் சாணக்கியனும் அதிருப்தியில் இருக்கின்றோம் என்றும் கடிதம் மூலம் அறிவிக்கின்றார்.

வாக்கெடுப்புக்கான காலம் அண்மித்து இருக்கையில் தான் இக்கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அரியநேத்திரனுக்கு ஆதரவுபெருகுகின்றது என்று கூறுவதற்கு பிரதிப் பொலிஸ்மா அதிபருக்கு என்ன அதிகாரம் இருக்கின்றது? இது தேர்தல் சட்டத்தை மீறுகின்ற குற்றமாகும். இது தொடர்பாக தேர்தல் ஆணைக்குழுவுக்கு நான் உத்தியோகபூர்வமாக முறைப்பாடொன்றைச் செய்திருக்கின்றேன்.

ஜனாதிபதியின் அறிவுறுத்தலின்படி பொதுவேட்பாளர் தொடர்பில் அவ்விதமானதொரு பிரமையை உருவாக்குவதற்காகச் செய்யப்பட்ட ஒரு தேர்தல் குற்றச் செயற்பாடே அக்கடிதமாகும். அதற்கு எதிரான நடவடிக்கையை நாம் எடுத்துள்ளோம். அதில் தேவையில்லாமல் எங்களுடைய பெயரும் சேர்க்கப்பட்டுள்ளது.

அரியநேத்திரன் பெயர் வருவதற்கு முன்பே தமிழ் வேட்பாளர் என்ற கருத்தியலுக்கு எதிர்ப்புத் தெரிவித்திருந்தேன். அரியநேத்திரனுக்கும் எனக்கும் தனிப்பட்ட விரோதம் எதுவும் இல்லை. இந்த எண்ணக்கரு மிகத்தவறானது. இந்த எண்ணக் கரு தமிழ் மக்களுக்கு ஒரு அபாயமான விடயம். இது தமிழ் மக்களின் அரசியல் தற்கொலைக்கு சமனானது இதனை நாங்கள் எதிர்க்கின்றோம்.

தேர்தலில் ஒருவரை எதிர்ப்பது சாதாரண

தொடர்ச்சி 9ம் பக்கம்....

## ரணிலுக்கும்....

(எட்டாம் பக்கத் தொடர்ச்சி)

விடயம். இது சகஜமான விடயம். அதைக் கடிதத்தில் எழுதவேண்டிய தேவை என்ன என்பது எனக்குத் தெரியவில்லை. என்னை எல்லோருக்கும் தெரியும். எனக்கும் வன்முறைக்கும் வெகு தூரம் என்பதும் எல்லோருக்கும் தெரியும். உண்மையிலே என்னில் வைக்கப்படும் குற்றச்சாட்டே அதுதான் நான் வன்முறைக்கு ஆதரவாக இல்லை என்பதுதான் குற்றச்சாட்டாகவே கூறிக்கொண்டிருக்கின்றார்கள்.

அப்படிக் கூறிவிட்டு அவருக்கு உயிர் ஆபத்து, இவர் என்னை எதிர்க்கின்றார் என்று கூறுவது ஒரு கேலிக்கூத்து. அவர்களுடைய அரசியல் வங்குரோத்துத் தன்மையை வெளிப்படையாகக் கூறி நிற்கின்றது. இதற்கு எதிரான சட்ட நடவடிக்கையை எடுப்பேன். இப்படியான ஒரு கடித்தை எழுத வைத்து மக்கள் ஆதரவு இல்லாத ஒருவருக்கு மக்கள் ஆதரவு இருக்கின்றது என்று பொய்யாகக் கூறிவருகின்றார். இதில் இருந்து அவர்கள் யாருடைய முகவர்கள் என்று அம்பலமாகி வருகின்றது. இதனை வெளிப்படுத்தவே இந்தச்சந்திப்பை மேற்கொண்டேன் - என்றார்.

## தேர்தல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பயன்படுத்துதல், நிழற்படம் எடுத்தல், காணொலி எடுத்தல், ஆயுதங்களை வைத்திருத்தல், புகைப்பிடித்தல், மதுபானம் அருந்துதல், போதைப்பொருள்பயன்படுத்துதல் மற்றும் மதுபானம் அல்லது போதைப்பொருள் பயன்படுத்தி வருகை தருதல் ஆகிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு சட்டத்தினால் தடை விதிக்கப்பட்டுள்ளது என்றுள்ளது.

## 2 ஆண்டுகளில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று கிரிபத்கொட நகரில் இடம்பெற்றது. அதில் உரையாற்றிய வசந்த முதலிகே மேலும் தெரிவித்ததாவது:

நாட்டின் அரசியல் முறை தொடர்பில் மக்கள் மத்தியில் கடந்த காலங்களில் பெரும் எதிர்ப்பும் விமர்சனங்களும் தெரிவிக்கப்பட்டிருந்தன. என்றாலும் தற்போது தேர்தல் சூடுபிட்டுக்குள் மக்களின் அந்த எதிர்ப்பை கொள்ளையடிக்க அனைத்து வேட்பாளர்களும் பொய் வாக்குறுதிகளை வழங்கி வருகின்றனர். அந்த வாக்குறுதிகளில் அடங்கி இருப்பது மக்களின் கவலை, கஷ்டங்களை வாக்குகளாக மாற்றும் முயற்சி மாத்திரமாகும். மக்களின் பிரச்சினைகளுக்கு பதிலளிக்க முடியுமான வேலைத்திட்டம் எதுவும் இல்லை.

நாடு எதிர்கொண்டுள்ள பிரச்சினைகளுக்கு தீர்வுகாண்பதாக தெரிவித்துக்கொண்டு இந்த நாட்டு ஆட்சியாளர்கள் கடந்த இரண்டு வருடங்களாக என்ன செய்தார்கள் என்பது எங்களுக்குத் தெரியும். நாட்டு மக்களுக்கு உரித்தான சொத்துகள், எண்ணெய் குதங்கள், துறைமுகம், விமான நிலையம், நிலங்கள் என அனைத்தையும் விற்பனை செய்கின்ற நடவடிக்கையையே செய்தார்கள்.

அதற்கு அப்பால் சென்று சர்வதேச நாணய நிதியத்திடம் கடன் பெற்றுக்கொண்டு, அந்த கடன்கள் மூலம் பெரும் கண்கட்டி வித்தை ஒன்று நாட்டில் ஏற்பட்டுள்ளதாக காட்டினார்கள். ஆனால் உண்மையில் நடந்தது ஒன்றும் இல்லை. நாட்டில் உள்ள பிள்ளைகளில் நான்கில் ஒன்று மந்த போஷணை குறைப்பாட்டால் பாதிக்கப்பட்டடிருக்கிறது. சனத்தொகை மதிப்பீடு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களத்தின் 2023ஆம் ஆண்டுக்கமைய சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் வீட்டுஅலகுகணிப்பீட்டு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதன் பிரகாரம், நாட்டின் கீழ் மட்டத்தில் இருப்பவர்கள் பெரும் கடன் சுமையுடன் அத்தியாவசிய தேவைப்பாடுகள் இழக்கப்பட்டுள்ள நிலைக்கு தள்ளப்பட்டிருக்கின்றனர்.

நாட்டின் மொத்தக் குடும்ங்களில் 22 வீதமானவை கடனாளியாகி இருக்கின்றன. 65,5 வீதமான குடும்பங்களின் மாதவருமானம் குறைவடைந்துள்ளது. மக்களின் உணவுச் செலவு கடந்த வருடங்களுக்கு நிகராக 91.1 வீதத்தால் அதிகரித்துள்ளது. சுகாதாரம் மற்றும் கல்விச் செலவு தாங்கிக்கொள்ள முடியாத நிலைக்கு அதிகரித்துள்ளது. அன்றாட உணவு வேளைக்கு வழியில்லாது நம்பிக்கை இழந்த நிலையிலேயே மக்கள் இருக்கின்றனர். ரணிலின் ஆளும்தரப்புச் செய்துள்ளதாக தெரிவிக்கும் பெரும் வித்தை.

அதனால் ரணில் விக்ரமசிங்கவை இந்தத் தேர்தலில் தோற்கடிக்கவேண்டும். அத்துடன் ஆளும்தரப்பின் கொள்கையையும் தோற்கடிக்க வேண்டும். ஏனெனில் வேறு ஒரு வேட்பாளர் இந்த கொள்கையுடன் ஜனாதிபதி பதவிக்கு வருவாராக இருந்தால், நாட்டு மக்களின் பிரச்சினை தீரப்போவதில்லை. கடந்த காலங்கள் முழுவதும் நாட்டில் அரசியல் அதிகாரத்தில் இருந்த அனைவரும் ஒரே கொள்கையையே செயற்படுத்தினார்கள். அதுதான் மக்களின் நிவாரணங்களை குறைத்துக்கொண்டு, சர்வதேச நாணய நிதியம். இந்தியா, அமெரிக்காவுக்கு அடிபணிந்த வேலைத்திட்டங்களாகும்.

கடந்த காலங்களில் மக்கள் போராட்டத்தில் முறைமை மாற்றத்தையே மக்கள் கோரினார்கள். நாட்டின் பொருளாதாரம் மற்றும் அரசியல் செயற்பாடுகளை தலைகீழாக மாற்றும் முறைமை மாற்றத்தையே மக்கள் கோரிவந்தனர். அந்த முறைமை மாற்றத்துக்கு ஏற்புடைய வேலைத்திட்டமே மக்கள் போராட்ட கூட்டணியாக நாங்கள் இந்த தேர்தலில் முன்வைத்திருக்கிறோம். அந்த அரசியல் மாற்றத்தை ஏற்படுத்தவே நுவன் போபகே ஜனாதிபதி வேட்பாளராகப் போட்டியிடுகிறார். அதனால் மக்களின் எதிர்பார்ப்புக்களை வெற்றிகொள்ள குடை சின்னத்துக்கு வாக்களிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன் - என்றார்.

# கொழும்பு – காங்கேசன் இடையே விசேட தொடருந்து சேவைகள்

## தேர்தலை முன்னிட்டு இயக்கப்படுகிறது

ஜனாதிபதித் தேர்தல் கடமைகளில் ஈடுபடும் அரச உத்தியோகஸ்த்தர்கள் மற்றும் பாதுகாப்பு தரப்பினருக்காக கொழும்பு கோட்டை - காங்கேசன்துறை இடையிலான தொடருந்து சேவை தொடங்கப்பட்டுள்ளது என தொடருந்துத் திணைக்களம் அறிவித்துள்ளது.

சனிக்கிழமை (21) இடம்பெறவுள்ள ஜனாதிபதி தேர்தல் வாக்கெடுப்பை முன்னிட்டு தேர்தல் கடமைகளுக்காக அரச அலுவலர்கள் மற்றும் பாதுகாப்பு தரப்பினர்களுக்காக தனியா தொடருந்துன தொடருந்து சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

இதற்கமைய 19,21ஆம் திகதிகளில் கொழும்பு கோட்டை-காங்கேசன்துறை வரையில் தனியான தொடருந்து சேவையில் ஈடுபடவுள்ளது. இன்று காலை 9 மணிக்கு கோட்டை புகையிரத நிலையத்தில் இருந்து காங்கேசன்துறை தொடருந்து நிலையம் நோக்கி விசேட தொடருந்து பயணிக்கவுள்ளது.

அதேபோல் சனிக்கிழமை (21), மற்றும் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (22) நண்பகல் 12 மணிக்கு காங்கேசன்துறை தொடருந்து நிலையத்தில் இருந்து கொழும்பு கோட்டை தொடருந்து நிலையம் நோக்கி விசேட தொடருந்து புறப்படும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com






காலைக்கதிர் Kalaikkathir

# அதிகூடிய வாக்கு வித்தியாசத்தில் ரணில் விக்கிரமசிங்க வெல்வார்

## இப்படி நம்புகிறார் அமைச்சர் சுசில் பிரேமஜயந்த

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அதிககூடிய வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெறுவார். 160 தேர்தல் தொகுதிகளுக்கும் நியமிக்கப்பட்டுள்ள ஒருங்கிணைப்பாளர்களால் மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பிற்கமைய 22 மாவட்டங்களில் அவர் முன்னிலையிலிருப்பதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேம்ஜயந்த தெரிவித்தார்.

பம்பலப்பிட்டியவில் நேற்று செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

160தேர்தல்தொகுதிகளுக்கும்நியமிக்கப்பட்டுள்ள தேர்தல் ஒருங்கிணைப்பாளர்களால் 3 நாட்களுக் கொருமுறை கணக்கெடுப்புக்கள் நடத்தப்படும். அதற்கமைய நேற்றுக் காலை 8.30க்கு கிடைக்கப்பெற்றதகவலுக்கமைய22மாவட்டங்களில் நாம் முன்னிலையிலிருக்கின்றோம். அதற்கமைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அதிகூடிய வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெறுவார்.

ஜனாதிபதி முறைமை இல்லாதிருந்திருந்தால் 1980களில் நாட்டின் நிலைமை மிக மோசமடைந்திருக்கும். விடுதலைப் புலிகளின் போரும் நிறைவடைந்திருக்காது.

2022இல் இடம்பெற்ற காலி முகத்திடல் போராட்டமும் இன்னும் நிறைவடைந்திருக்காது. எனவே மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் ஒரு தலைவருக்கே வாக்குகள் வழங்கப்பட வேண்டும் என்பதை நினைவுபடுத்துகின்றோம்.

சர்வதேச நாணய நிதியத்துடன் இணைந்து செயற்படுவோம் என்றும், அதில் சிலதிருத்தங்களை மேற்கொள்வோம் என்றும் தற்போது கூறும் சஜித் பிரேமதாசவும், அநுரகுமார திஸாநாயக்கவும் அன்று நாடாளுமன்றத்தில் அதனை எதிர்த்தனர்.

ஆனால் அவர்களது கட்சியைப் பிரதிநிதித்து வப்படுத்தும் பொருளாதார நிபுணர்களும், பேராசியர்களும் அதற்கு முரணான கருத்துக்களையே கூறுகின்றனர். அவ்வாறெனில் ரணில் விக்கிரமசிங்கவின் தீர்மானம் சரியானது.

எனவே ஜனாதிபதி பதவியில் மாற்றம் ஏற்பட்டால் இதுவரை முன்னெடுக்கப்பட்ட வேலைத்திட்டங்கள் அனைத்தும் சீர்குலையும். 2015இல் மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட போது நான் கூட்டணியின் செயலாளராக செயற்பட்டேன்.

வெற்றிலை சின்னத்தில் போட்டியிட்டோம். மைத்திரிபால சிறிசேன அன்னம் சின்னத்தில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். மக்களுக்கு பழக்கமில்லாத சின்னத்தில் போட்டியிட்டாலும் அவர் வெற்றி பெற்றார்.

2015இல் எமது தரப்பு தேர்தலுக்காக செலவிட்டதைப் போன்று எந்த தேர்தலிலும் செலவிடவில்லை. ஆனால் இறுதியில் அன்னம் வெற்றி பெற்றது.

அதேபோன்று தான் தற்போது செலவிடும் கட்சியின் நிலைமையும் காணப்படுகிறது. வெளிநாடுகளிலிருந்து வாக்களிப்பதற்கு இலட்சக் கணக்கானோர் வருவதாகக் கூறினாலும் இதுவரை 100 பேர் கூட வரவில்லை. எனவே இவர்கள் எதிர்பார்ப்பது இடம்பெறாவிட்டால், அவர்கள் எவ்வாறு செயற்படுவார்கள் என்பதும் பிரச்சினைக்குரியதாகும். குழந்தைகளும் இன்று வாக்கு கோருகின்றனர். எனவே அவர்களுக்கு வாக்களித்து உங்கள் வாக்குகளை வீணடிக்க வேண்டாம் எனக் கேட்டுக்

# கூட்டமைப்பாக இணைவது இனி வெறும் கனவு மட்டுமே

## வடக்கு மாகாண அவைத் தலைவர் சிவஞானம் தெரிவிப்பு

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக ஒன்றிணைந்து செயற்படவேண்டும் என்பதே எமது விருப்பம். ஆனால், மற்றைய தமிழ்க் கட்சிகளுடன் ஒன்றிணைந்து செயற்படுவது என்பது இனி வெறும் கனவாகவே இருக்கும் என்று இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் மூத்த துணைத் தலைவரும் வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவருமான சீ.வீ.கே.சிவஞானம் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்த அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ் அரசுக் கட்சி கட்டுக் கோப்பான கட்சி. தேர்தல் காலத்தில் ஒவ்வொருவரும் ஒவ்வொரு கருத்துக்களை முன்வைப்பார்கள். கட்சிகூடி முடிவை அறிவிக்கும். அது கட்சியின் முடிவு . இதன் பின்னர் பலரும் பல சந்திப்புகளைச் செய்வார்கள். அதன் பின்னர் சில முடிவுகளை தனிநபர்கள் எடுக்கும் நிலை உருவாகிறது. அவ்வாறே இந்த தேர்தல் நேரத்திலும் இடம்பெற்றுள்ளது.

இத்தகைய நிலையில் யாருக்கு யார் ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுப்பது? தலைவருக்கு எதிராக எடுப்பதா? கட்சியைப் பொறுத்தவரை கட்சியில் ஒவ்வொருவரையும் பலர் சந்திப்பார்கள். தமக்கு ஆதரவு தருமாறு கேட்பார்கள். கட்சிக்குள் என்ன நடக்கிறது என்பதை மக்கள் தெரிந்து கொள்ளவேண்டும்.

தமிழ் அரசுக் கட்சிக்குக் கொள்கை இருக்கிறது. கட்சி நிலையாக இருக்கும். அடுத்துவரும் காலத்தில் பல்வேறு தேர்தல்கள் நடைபெறவுள்ளது.அந்த நேரத்தில் பலரும் வருவார்கள். அந்த நேரத்தில் நாம் முடிவுகளை எடுப்போம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக ஒன்றிணைந்துசெயற்படவேண்டும் என்பதே எமது விருப்பம். ஆனால் இனி அது கனவாகவே இருக்கும். நாடாளுமன்றத்தில் தொடர்ந்து இருக்கவேண்டும் என்று நினைக்கின்றீர்களா? புதியவர்களுக்கு அனுமதி இல்லையா? புதியவர்களுக்கு அனுமதி வழங்கப்பட வேண்டும் இவை தொடர்பில் அடிக்கடி ஊடக சந்திப்புக்களை நடத்த வேண்டி வரும் – என்றார்.

# "அரியநேத்திரனுக்கே வாக்களியுங்கள்"

## விக்னேஸ்வரன் கோரிக்கை

தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பால் ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்தப்பட்டுள்ள அரியநேத்திரனுக்கே தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான விக்கினேஸ்வரன் அறைகூவல் விடுத்துள்ளார்.

ஜனாதிபதி வேட்பாளர் அரியநேத்திரனுக்கு தமிழ் மக்கள் அனைவரும் வாக்களிக்கவேண்டும் என்று வலியுறுத்தி கொழும்பிலுள்ள வெஸ்டன் ஹோட்டலில் நேற்று மாலை செய்தியாளர்களைச் சந்தித்து அவர் இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாம் எதிர்பார்த்ததை விடவும் அரியநேத்திரனுக்கான ஆதரவு மக்கள் மத்தியில் அதிகரித்திருக்கிறது. எமது நாட்டில் நாடாளுமன்றத் தேர்தல், மாகாணசபைத் தேர்தல், உள்ளூராட்சிமன்றத் தேர்தல் ஆகியவற்றில் அந்தந்தப்பகுதிகளைச்சேர்ந்தமக்களின் தெரிவுகளுக்கே இடமளிக்கப்படும். ஆனால் ஜனாதிபதித் தேர்தலில் மாத்திரமே ஒட்டுமொத்தநாட்டுமக்களும் ஒரே தளத்தில் பங்கேற்பர்.

இதுவரையில் ஆட்சிபீடமேறிய சிங்கள பௌத்த ஆட்சியாளர்கள் எமக்கானதீர்வைப்பெற்றுத்தரவில்லை. வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழர்களுக்குச்சொந்தமானகாணிகள் தொடர்ச்சியாகக் கைப்பற்றப்பட்டு வருகின்றன. குறிப்பாக குச்சவெளியில் 431ஏக்கர் நிலப்பரப்பு ஆளும்தரப்பால் கையகப்படுத்தப்பட்டதன் விளைவாக வடக்கு, கிழக்கில் தமிழ் மக்களின் நிலத்தொடர்ச்சி அற்றுப்போயிருக்கிறது.

இவ்வாறு தமிழர்களுக்கு எதிராக இன ரீதியாகப் பிரச்சினைகள் கட்டவிழ்த்துவிடப்படும்போது நாமும் அதனை முறியடிப்பதற்குரிய நடவடிக்கைகளை முன்னெடுக்கவேண்டும். இவ்வாறானதொரு பின்னணியில் எமது பிரச்சினைகளை சர்வதேச சமூகத்துக்குச் சொல்லும் நோக்கிலும், வடக்கு கிழக்கில் தமிழ் மக்களின் ஒற்றுமையைப் பறைசாற்றும் நோக்கிலும் இம்முறை தேர்தலில் களமிறக்கப்பட்டிருக்கும் அரியநேத்திரனுக்கே தமிழ் மக்கள் வாக்களிக்கவேண்டும் - என்றார்.

இச்சந்திப்பில் கருத்து வெளியிட்ட சட்டத்தரணி புவிதரன் தெரிவித்ததாவது:

2009 ஆம் ஆண்டு போர் முடிவுக்குக்கொண்டுவரப்பட்டதுடன் தமிழ்த் தேசிய அரசியலில் ஒரு வெற்றிடம் ஏற்பட்டது., எனவே 2010 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளர் ஒருவர் களமிறக்கப்பட்டிருக்கவேண்டும்.

இருப்பினும் அப்போது பொதுவேட்பாளர் களமிறக்கப்படாத நிலையில், தற்போதேனும் அதற்குரிய நகர்வுகள் மேற்கொள்ளப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கது ஆகவே தமிழர்களின் பிரச்சினைகள் இன்னமும் தீர்க்கப்படாமல் இருக்கின்றன என்பதை சர்வதேசத்துக்குக் கூறுவதற்கு அரியநேத்திரனுக்கு வாக்களிக்கவேண்டியது அவசியம்.

அதேபோன்று சமகாலத்தில் தமிழ் மக்களைப் பிளவுபடுத்துவதற்கான பல்வேறு நடவடிக்கைகள் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. அவற்றைத் தோற்கடித்து தமிழ் மக்கள் அனைவரையும் ஒற்றுமைப் படுத்துவதற்காகவே தமிழ் வேட்பாளர் ஒருவர் களமிறக்கப்பட்டிருக்கிறார்.

அங்கு கருத்துரைத்த தமிழ் அரசுக் கட்சியின் கொழும்புக்கிளை செயலாளர் மிதிலைச்செல்வி, அடுத்தடுத்த ஜனாதிபதித் தேர்தல்களிலும் தமிழர்கள் சார்பில் பொதுவேட்பாளர் ஒருவர் களமிறக்கப்படுவார் என்றார்.

# "எனக்கு மட்டுமே வாக்களியுங்கள்"

## அரியநேத்திரன் கோரிக்கை

தனக்கு வாக்களிப்பவர்கள் தனக்கு மட்டுமே வாக்களிக்குமாறும் தன்னுடன் சேர்த்து விருப்பு வாக்குகள் எவற்றையும் போடவேண்டாம் என்றும் ஜனாதிபதி வேட்பாளர் அரியநேத்திரன் கோரிக்கை வைத்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்றுச் செய்தியாளர்களைச் சந்தித்த அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் தமிழ் பொது வேட்பாளருக்கு மாத்திரம் வாக்களியுங்கள். சிலர் விருப்பு வாக்குகளை ஏனைய வேட்பாளர்களுக்கு அளிக்குமாறு கூறுகின்றார்கள். அவ்வாறு செய்யாது. தனியே தமிழ் பொது வேட்பாளருக்கு மாத்திரம் வாக்களியுங்கள். அதுதான் தமிழ் மக்களின் வரலாற்று கடமையாகும்.

ஓகஸ்ட் 23 'நமக்காக நாம்' என்ற பரப்புரைய நாம் யாழ்ப்பாணம், பொலி கண்டியில் ஆரம்பித்து, எட்டு மாவட்டங்களுக்கும் சென்றோம். அதனூடாக மக்கள் மத்தியில் எனக்கான வரவேற்பு அதிகரித்துள்ளது.

வேட்பாளர்களின் பரப்புரைகள் செப். 18 நள்ளிரவுடன் முடிவுக்கு வருகின்றது. அதன் பின்னர் பொது வேட்பாளர் பற்றி வதந்திகளை பொய்யான தகவல்களை பரப்ப சிலர் திட்டமிட்டுள்ளனர் என எமக்கு தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளன. ஏஐ தொழிநுட்பத்தைப் பயன்படுத்தி பொய் தகவல்களை பரப்ப உள்ளனர் என்று அறிகிறோம். எனவே மக்கள் விழிப்பாக இருந்து செப்டெம்பர் 21 காலை வேளைகளிலையே வாக்கு சாவடிகளுக்குச் சென்று சங்கு சின்னத்திற்கு வாக்களிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன் என தெரிவித்தார்.

# பரிசோதனைகளுக்கான காலமல்ல இது நாட்டை மீண்டும் ரணிலிடம் கொடுங்கள்

## பிரதமர் நேற்று வலியுறுத்து

சஜித், அநுர போன்றவர்களுக்கு வாக்களித்துப் பரிசீலித்துப் பார்க்கவேண்டாம். இது பரிசோதனைக்கான காலமல்ல. ரணில் விக்கிரமசிங்கவுக்கு வாக்களித்து நாட்டை மீண்டும் அவரிடம் கைளிக்கவேண்டும் என்று பிரதமர் தினேஸ் குணவர்தன தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற இறுதித் தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய போது அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச பதவி விலகியதன் பின்னர் ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்காக நாடாளுமன்றத்தில் வாக்கெடுப்பு நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டது. அந்தச் சந்தர்ப்பத்தில் சஜித் பிரேமதாச போட்டியிடுவதாகக் கூறினாலும், பின்னர் டலஸ் அழகப்பெருமவே களமிறக்கப்பட்டார்.

நாடாளுமன்றத்தில்கூட தன்னால் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக அதிக வாக்குகளைப் பெற்றுக் கொள்ள முடியாது எனத் தெரிந்து கொண்டுதான், அன்று சஜித் பின்வாங்கினார். அவ்வாறான ஒருவரால் எவ்வாறு நாட்டு மக்களில் பெரும்பான்மையானோரின் வாக்குகளைப் பெற்று வெற்றி பெற முடியும்?

இவ்வாறாக நெருக்கடிகள் ஏற்படும் ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் சஜித் பிரேமதாச பயந்து ஓடினார். மறுபுறம் அநுரகுமார திஸாநாயக்க நாடாளுமன்ற வாக்கெடுப்பில் 3 வாக்குகளை மாத்திரமே பெற்றுக் கொண்டார். அவரால் எவ்வாறு நாட்டை நிர்வகிக்க முடியும்? ஒரு சட்டத்தைக் கூட அவரால் நிறைவேற்றிக் கொள்ள முடியாது.

எனவே இவ்வாறானவர்களுக்கு வாக்களித்து பரிசோதித்துப் பார்க்க வேண்டாம்.காரணம்இதுபரிசோதனைக்கான காலம் அல்ல. எனவே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு வாக்களித்து மீண்டும் அவரிடம் நாட்டைக் கையளிக்க வேண்டும் என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir

# மரநடுகையில் தொடர்ந்து ஈடுபடும் மின்மினி மின்ஹாவுக்குக் கௌரவம்

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வழங்கினார்



(பாறுக் ஷிஹான்)

இலங்கை தீவு முழுவதும் பசுமையை ஏற்படுத்தும் நோக்கில் ஒரு மில்லியன் நபர்களுக்கு காலநிலை மாற்றம் தொடர்பாகவும் பிலாஸ்டிக் - பொலித்தீன் பாவனை எதிர்ப்பு தொடர்பாகவும் ஒரு மில்லியன் மரக்கன்றுகளை நாடு முழுவதும் நடுவது தொடர்பாகவும் இற்றைக்கு மூன்று வருடங்களாக சுய முயற்சியாக இச் செயற்பாட்டை மேற்கொண்டுவரும் சம்மாந்துறை அல்-அர்சத் மகா வித்தியாலயத்தில்எட்டாம் தரத்தில் கல்வி கற்கும் மின்மினிமின்ஹாவுக்கு கடற்றொழில் மற்றும் நீரியல் வள மூலங்கள் அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா பொன்னாடை போர்த்தி விருது வழங்கி கௌரவித்துள்ளார்.

அம்பாறைமாவட்டம் காரைதீவு பகுதியில் ஜனாதிபதி வேட்பாளர் ரணில்விக்கிரமசிங்கவை ஆதரித்தும் மற்றும்தனது 30 வருட நாடாளுமன்ற அரசியல் வாழ்வு தொடர்பில் மக்களால் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வு செவ்வாய்க்கிழமை காரைதீவு கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

இதன்போது குறித்த மாணவி மேடைக்கு அழைக்கப்பட்டு ஒரு மில்லியன் மரக்கன்றுகளை நாடு முழுவதும் நடுவது தொடர்பான செயற்திட்டம் குறித்து கேட்கப்பட்டதுடன் அமைச்சரால் அம்மாணவி கௌரவித்தமை குறிப்பிடத்தக்கது.(05)

# வாகன விபத்தில் சிறுமி உயிரிழப்பு

(தில்சாத் பர்வீஸ்)

அம்பாறை - கல்முனை வீதியில் மாவடிப்பள்ளி பெரியபள்ளி வாசலுக்கு முன்பாக நேற்று காலை 07 மணியளவில் நடைபெற்ற வாகன விபத்தில் 14 வயது சிறுமி ஒருவர் சம்பவ இடத்திலேயே மரணமடைந்துள்ளார்.

மோட்டார் சைக்கிளில் தந்தையுடன் பயணித்துக் கொண்டிருந்த சிறுமியின் மீது தனியார் போக்குவரத்து பஸ் ஒன்று மோதியதிலேயே இந்த விபத்து இடம் பெற்றுள்ளது.

சம்மாந்துறையை சேர்ந்த மாணவி ஒருவரே இவ்வாறு விபத்தில் மரணமடைந்துள்ளார்.

இந்த விபத்து நடந்தவுடன் குறித்த பஸ்ஸின் சாரதி விபத்து நடந்த இடத்திலிருந்து தப்பி ஓடியுள்ளார். இந்நிலையில் தற்போது பஸ் சாரதி காரைதீவு பொலிஸில் சரணடைந்துள்ளார்.

காரைதீவு பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (05)

# நீண்டகாலமாக மரக் கடத்தலில் ஈடுபட்டுவந்த சந்தேகநபர் கைது

புத்தளம், வனாத்தவில்லு, தப்போவ வனப்பகுதியில் நீண்டகாலமாக மரக் கடத்தலில் ஈடுபட்டு வந்த சந்தேக நபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் தெரிவித்தனர்.

கருவலகஸ்வெள வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்கள அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலுக்கு அமைய, பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் இந்த வனப்பகுதியில் சுற்றித்திரியும் வனவிலங்குகளையும் வேட்டையாடியுள்ளதாக விசாரணையில் தெரியவந்துள்ளது.

சந்தேக நபரிடம் இருந்து துப்பாக்கி, 02 ரவைகள், 09 வெற்று தோட்டாக்கள், இரும்பு ஆயுதங்கள், 100 கிலோ மான் இறைச்சி மற்றும் மரப் பலகைகள் என்பன பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் ரால்மடு–எலுவங்குளம் பகுதியைச் சேர்ந்தவர் என பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் கைப்பற்றப்பட்ட பொருள்களுடன் வனாத்தவில்லு வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் மேலும் தெரிவித்தனர். (05)

# சஜித் ஆதரவாளர்களை அச்சுறுத்திய விஜயகலா

## பொலிஸில் முறைப்பாடு

ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவின் பிரசாரப் பணிகளில் ஈடுபட்ட தன்னையும் ஆதரவாளர்களையும் முன்னாள் அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் அச்சுறுத்தும் வகையில் செய்யப்பட்டதாக வட்டுக்கோட்டை ஐக்கிய மக்கள் சக்தியின் தொகுதி கிளை அமைப்பாளர் சதாசிவம், ஊர்காவற்துறைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளதாகத் தெரிவித்தார்.

குறித்த விடயம் தொடர்பில் அவர் தெரிவிக்கையில் –

சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவு தெரிவித்து செவ்வாய்க்கிழமை ஊர் காவற்துறை பகுதியில் பிரசார நடவடிக்கையில் ஈடுபட்டோம்.

மதியம் மர நிழலில் உணவு அருந்துவதற்காக இளைப்பாறிய நிலையில் அவ் வழியாக காரில் வந்த முன்னாள் அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் தன்னுடன் வந்தவர்களுக்கு ரணில்விக்கிரமசிங்கவின் பிரசாரத் துண்டுகளை வழங்கினார்.

அப்போது நாங்கள் ஏன் இங்கு நிற்கிறோம் என்பது தொடர்பில் அவருக்கு தெரியப்படுத்திய நிலையில், கோபமடைந்த விஜயகலா எமது வேட்பாளரை கீழ்த்தரமாக பேசியதுடன் நான் வழங்கிய வேலை வாய்ப்பை அவர் நிறுத்தியதாக எம்முடன் முரண்பட்டார்.

அதுமட்டுமல்லாது என்னுடன் வந்தவர்களுக்கு வேலைவாய்ப்புதான் பெற்று தருவதாகவும் சஜித் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டாம் எனவும் தெரிவித்தார்.

இதன்போது ஒரு வேட்பாளரை ஆதரித்து பிரசார நடவடிக்கைகளில் ஈடுபடுவது ஜனநாயக உரிமை அதனை நீங்கள் எங்களுக்கு கூறவேண்டிய தேவை இல்லை என நான் கூறினேன்.

அதன்பின் நான் ஊர்காவற்துறைப் பொலிஸ் நிலையத்திற்கு தொலைபேசி மூலமாக நடந்த விவரங்களை தெரிவித்த நிலையில் –

கோபமடைந்த விஜயகலா சிங்கள மொழியில் என்னை தரகுறைவாக பேசியதுடன் என்னை ஒருவரும் ஒன்றும் செய்ய முடியாது என கூறிவிட்டு சென்றார் என அவர் மேலும் தெரிவித்தார்.

(05)

# மசாஜ் நிலையப் பெண்களிடமிருந்து இலஞ்சம்பெற்ற கான்ஸ்டபிள் கைது

சுற்றிவளைப்பு நடவடிக்கையை மேற்கொள்ளாமல் இருப்பதற்கு மசாஜ் நிலைய பணிப்பெண்களிடமிருந்து இலஞ்சம் பெற்றதாகக் கூறப்படும் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என அநுராதபுரம் பொலிஸ் குற்றப் புலனாய்வு பிரிவினர் தெரிவித்தனர்.

எலயாபத்துவ பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் 27 வயதுடைய பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் தெரியவருவதாவது -

சந்தேக நபரான பொலிஸ் கான்ஸ்டபிள் கடந்த 14 ஆம் திகதி இரவு 11.30 மணியளவில் பெண்ணொருவருடன் இணைந்து மோட்டார் சைக்கிளில் மசாஜ் நிலையம் ஒன்றிற்குச் சென்றுள்ளார்.

இதன்போது, சந்தேக நபரான பொலிஸ் கான்ஸ்டபிள் மசாஜ் நிலையத்திலிருந்த பணிப்பெண்களிடம் தான் சுற்றிவளைப்பு நடவடிக்கைக்காக வந்ததாகவும் சுற்றிவளைப்பு நடவடிக்கையை மேற்கொள்ளாமல் இருப்பதற்கு 3 ஆயிரம் ரூபா பணம் வேண்டும் எனவும் கூறியுள்ளார்.

பின்னர் , இந்த பணிப்பெண்கள் சந்தேக நபரான பொலிஸ் கான்ஸ்டபிளுக்கு 2 ஆயிரம் ரூபா பணத்தை மாத்திரம் கொடுத்துள்ளனர்.

இதனையடுத்து, சந்தேக நபரான பொலிஸ் கான்ஸ்டபிள் மசாஜ் நிலையத்திலிருந்து வெளியே சென்றுள்ள நிலையில் மறுநாள் இரவு மற்றுமொரு நபருடன் இணைந்து குறித்த மசாஜ் நிலையத்திற்கு மீண்டும் சென்றுள்ளார்.

இதன்போது, சந்தேக நபரான பொலிஸ் கான்ஸ்டபிள் தன்னுடன் வந்த நபருக்கு இலவசமாகச் சேவையை வழங்க வேண்டும் என மசாஜ் நிலைய பணிப்பெண்களிடம் கூறியுள்ளார்.

பின்னர், சந்தேகநபரான பொலிஸ் கான்ஸ்டபிளுக்கும் மசாஜ் நிலைய பணிப்பெண்ணின் கணவருக்கும் இடையில் தகராறு ஏற்பட்டுள்ளது. இதனையடுத்து, பொலிஸாருக்கு கிடைத்த முறைப்பாட்டின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் சந்தேகநபரான பொலிஸ் கான்ஸ்டபிள் கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை அநுராதபுரம் பொலிஸ் குற்றப் புலனாய்வு பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# 5 ஆம்தர புலமைப்பரிசில் பரீட்சை; திணைக்களம் முன் ஆர்ப்பாட்டம்

5ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சையின் முதல் 3 வினாக்களை நீக்கி பரீட்சைபெறுபேறுகளை வெளியிடுமாறு பரீட்சை திணைக்களத்தினால் முன்வைக்கப்பட்ட தீர்மானத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து பெற்றோர்கள் சிலர் பரீட்சை திணைக்களத்திற்கு முன்பாக புதன்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

கடந்த 15 ஆம் திகதி நடைபெற்ற 5 ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சையின் போது வினாத்தாளின் முதல் மூன்று வினாக்களும் சமூக ஊடகங்களில் பகிரப்பட்டிருந்தது.

இதனையடுத்து, 5ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சையின் முதல் 3 வினாக்களை நீக்கி பரீட்சை பெறுபேறுகளை வெளியிடுமாறு பரீட்சை திணைக்களத்தால் செவ்வாய்க்கிழமை அறிவிக்கப்பட்டிருந்தது.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்த பெற்றோர்கள் சிலர் பரீட்சை திணைக்களத்திற்கு முன்பாக புதன்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளதுடன் பரீட்சையை இரத்துச் செய்யுமாறும் கூறியுள்ளனர்.

இதன்போது, ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ள பெற்றோர்கள் சிலருக்குப் பரீட்சை திணைக்களத்திற்குள் சென்று கடிதங்களைச் சமர்ப்பிப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், பெற்றோர்கள் தொடர்ந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வருவதால், சம்பவ இடத்திற்கு பொலிஸ் அதிகாரிகள் குழு சென்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் குறித்து பரீட்சைகள் ஆணையாளர் மிகவும் கவனக்குறைவாக இருப்பதாகவும் இதனால் அவர் தனது பதவியை இராஜினாமா செய்ய வேண்டும் எனவும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ள பெற்றோர்கள் தெரிவித்துள்ளனர்.

(05)

# மின்சாரம் தாக்கியதில் இளைஞன் சாவு: : தோட்ட உரிமையாளர்களுக்கு மறியல்

கேகாலை, பின்தெனிய பிரதேசத்தில் மின்சாரம் தாக்கி இளைஞன் ஒருவன் உயிரிழந்த சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட இரண்டு சந்தேக நபர்களை எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 01 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கேகாலை நீதவான் நீதிமன்றம் செவ்வாய்க்கிழமை உத்தரவிட்டுள்ளது.

கேகாலை, கிரிதன பிரதேசத்தைச் சேர்ந்த 31 வயதுடைய இளைஞனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பில் தெரியவருவதாவது -

உயிரிழந்த இளைஞன் கடந்த 16 ஆம் திகதி அன்று தனது உறவினருடன் இணைந்து குருகொட ஓயாவிற்கு சென்று கொண்டிருந்த போது, வன விலங்குகளிடமிருந்து பாதுகாப்பதற்காக மரவள்ளிக்கிழங்கு தோட்டம் ஒன்றில் பொருத்தப்பட்டிருந்த மின்சாரக் கம்பிகளில் சிக்கி உயிரிழந்துள்ளார்.

இதனையடுத்து, பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் குறித்த மரவள்ளிக்கிழங்கு தோட்டத்தில் மின்சாரக் கம்பிகளைப் பொருத்திய இரண்டு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் கேகாலை நீதவான் நீதிமன்றில் செவ்வாய்க்கிழமை ஆஜர்படுத்தப்பட்டதையடுத்து அவர்களை எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 01ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பின்தெனிய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(05)

காலைக்கதிர் Kalaikkathir

# பிரபாகரனின் அச்சுறுத்தலால் மூடப்பட்ட கட்சி அலுவலகத்தை மீண்டும் திறப்போம்

## டக்ளஸ் தேவானந்தா தெரிவிப்பு

(பாறுக் ஷிஹான்)

ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவை ஆதரித்து கடற்றொழில் அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா செவ்வாய்க்கிழமை காரைதீவு கலாச்சார நிலையம் மக்கள் சந்திப்பு ஒன்றை மேற்கொண்டிருந்தார்.

இதன் போது அவர் அங்கு உரையாற்றுகையில் -

தேர்தலுக்கு இன்னும் 2,3 நாள்கள் தான் எஞ்சி இருக்கின்றன.இந்த தேர்தலுடன் எமது கடமைகள் பொறுப்புகள் நிறைவடைய போவதில்லை.1990 ஆண்டு ஆரம்பத்தில் அம்பாறை மாவட்டத்தின் காரைதீவு பகுதியில் ஈபிடிபி கட்சியின் அரசியல் அலுவலகம் அமைக்கப்பட்டு இப்பகுதி மக்களுக்கு பல்வேறு சேவைகளை செய்து வந்தது. துரதிஸ்டவசமாக இவ்வலுவலகம் பின்னர் மூடப்பட்டது. அதுமாத்திரமன்றி அந்த காலப்பகுதியில் இருந்த பிரபாகரனின் இயக்கத்தை சேர்ந்தவர்கள் பிரபாகரனின் பணிப்புரைக்கமைய ஈபிடிபி உறுப்பினர்களை கொலை செய்ததும் கொல்ல முற்பட்டதும் அவர்களால் அச்சுறுத்தல் ஏற்பட்டமையினாலும் இவ்வலுவலகத்தை மூட வேண்டி ஏற்பட்டது.ஆனால் மிக விரைவில் இம்மாவட்டத்திற்குரிய அலுவலகத்தை தோழர்களின் உதவியுடன் மீண்டும் திறக்க இருக்கின்றோம்.

தற்போது ஜனாதிபதி தேர்தல் ஒன்று நடைபெற இருக்கின்றது.பிரதான வேட்பாளர்களாக மூவர் களத்தில் இருக்கின்றார்கள்.இம்மூவரில் எமது ஈபிடிபி கட்சி விரும்புகின்ற ஜனாதிபதி வேட்பாளராக அம்மான் ரணில் விக்ரமசிங்க இருக்கின்றார்.ஏனைய வேட்பாளர்கள் சஜீத் மற்றும் அனுர இதர போட்டியாளர்களாக இருக்கின்றனர்.இன்று நாடு இருக்கின்ற நிலைமையில் எமது கட்சியின் ஆய்வின் படி நாட்டின் அபிவிருத்தியை முன்னெடுத்து செல்லக் கூடிய ஆற்றல் அறிவு அம்மான் ரணில் விக்ரமசிங்கவிற்கு தான் இருக்கின்றது.அவர் கடந்த 2 வருடங்களில் தன்னால் நாட்டினை கட்டியெழுப்ப முடியும் என நிரூபித்திருக்கின்றார்.கடந்த காலங்களில் எமது நாடு பொருளாதார ரீதியாக வீழ்ச்சியடைந்திருந்ததை யாவரும் அறிவீர்கள்.அதிலிருந்து மீட்டு நாட்டை முன் கொண்டு செல்லும் பணியை அவர் தான் முன்னெடுக்கின்றார்.

ஏனைய இரு வேட்பாளர்களுக்கும் கடந்த காலங்களில் நாடு இருந்த நிலைமை தொடர்பில் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.ஆனால் அவர்கள் அதை தட்டி கழித்து விட்டார்கள்.ஏனெனில் பொறுப்பெடுப்பதற்கு தயாராக இருக்கவில்லை.பயம் காரணமாக அவர்கள் தட்டி கழித்து விட்டார்கள்.ஆனால் அம்மான் ரணில் விக்ரமசிங்க தைரியத்துடன் முன்வந்து அதை செய்து காட்டி இருக்கின்றார்.அவரால் இன்னும் செய்ய வேண்டி இருக்கின்றது.

அவர் கடந்த காலங்களில் நாட்டை பொறுப்பேற்கும் போது விலையேற்றங்கள் பொருள் தட்டுப்பாடு வரிசை யுகம் என்பன இருந்தன.தெற்கில் கூட சில வன்முறைகள் தலைவிரித்தாடின. எனினும் கடந்த 2 வருடங்களில் எல்லாவற்றையும் முடிவிற்கு கொண்டு வந்து நாட்டை முன்னோக்கி செல்கின்ற வழிகளை ஏற்படுத்தியுள்ளார். சர்வதேச நாணய நிதியத்திடம் கடன் வசதிகளை பெறக்கூடாது என தென்னிலங்கை பகுதியில் உள்ள சில தரப்பினர்கள் கூறிய போதிலும் ரணில் விக்ரமசிங்க அவர்கள் தர்க்க ரீதியாக பதிலளித்து அக்கடன்களை பெற்று நாட்டை அபிவிருத்தி செய்தார்.





ஆனால் நாட்டை புதியவர்கள் பொறுப்பேற்கும் போது நாங்கள் மீண்டும் பூச்சியத்தில் இருந்துதான் தொடங்க வேண்டும்.ஆனால் இவ்விடயம் சாத்தியமற்றது.

எனவே அம்மான் ரணில் விக்ரமசிங்கவின் சேவை தொடர வேண்டும்.அந்த வகையில் தற்போது தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ளது.எரிவாயு சின்னத்தில் அம்மான் ரணில் விக்ரமசிங்க சுயேச்சையாக போட்டியிடுகின்றார்.எரிவாயு(சிலின்டர்) சின்னம் எல்லோருக்கும் பரீட்சயமான சின்னம்.வீட்டுப்பாவனைக்கான சின்னம்.அந்த வகையில் எதிர்வரும் தேர்தலில் சிலின்டர் சின்னத்திற்கு எங்கள் வாக்கினை செலுத்தி அவரது வெற்றியில் நாங்கள் பங்கெடுப்பதன் ஊடாக எதிர்காலத்தில் நாங்கள் எமது பிரதேசங்களை அபிவிருத்தி அடைய செய்வதற்கும் முன்னேற்றம் அடைய செய்வதற்கும் சாதகமாக அமையும் என தெரிவித்தார்.

அத்துடன் காரைதீவு மக்களினால் கடற்றொழில் அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தாவின் 30 வருட அரசியல் பாராளுமன்ற நிறைவை ஒட்டி பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டதுடன் இந்நிகழ்வில் அரசியல் பிரமுகர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.(05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 19.09.2024இல் வெளியிடப்பெற்றது